# யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு உடுப்பு

Registered as a News Paper in Ceylon

விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 305
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சார்த்திகை 29 ஷவ்வால் 14 திங்கட்கிழமை (14-12-70)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

ஹரன் ஜுவல்லர்ஸ்

போன். 444 தந்தி. 'இரத்தினம்ஸ்'

50, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## வழங்கப்படுவதில்லை?

## தாய்மார் அவதி

— எஸ். கே. காசிலிங்கம் —

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பிரசவ வார்ட்டுகளில் அனுமதிக்கப்படும் தாய்மார்களுக்கு ஆஸ்பத்திரியினால் வழங்கப்பட்டுவந்த உடுபிடவை (செக் குளோத்) தற்போது வழங்கப்படுவதில்லையாம், இதனால் இங்கு செல்லும் நோயாளர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டி ஏற்படுகிறது.

கடந்த இரு வாரங்களாக பெரியாஸ்பத்திரி முதலாம் 2ம் வார்ட்டுக்களான பிரசவ வார்ட்டுக்களில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரி உடுப்புக்கள் வழங்கப்படவில்லை வீடுகளிலிருந்து உடுப்புக்களை கொண்டுவந்து உடுக்கும்படி தாய்மார்கள் கேட்கப்படுகிறார்கள்.

தூர இடங்களில் இருந்து பிரவசத்துக்காக ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாக வரும் தாய்மார்களுக்குக் கூட உடுப்புகள் வழங்கப்படுவதில்லையாம். அவர்கள் உடுத்துக் கொண்டுவந்த உடுப்புக்களுடனேயே பிரசவம் நடைபெற்ற பின்னரும் இருக்கவேண்டியிருப்பதாக பலத்த புகார் கூறப்படுகிறது.

மழை காரணமாக 'செக் குளோத்'துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதனாலேயே நோயாளர்களை உடுப்புக்களுடன் வரும்படி கேட்கப்படுவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்களில் விசாரித்தபோது கூறினர். பொதுவாக ஆஸ்பத்திரியில் உள்ள சகல வார்ட்டுக்களிலும் இவ்விதமே நோயாளர்கள் கஷ்டமுறுவதாகத் தெரிய வருகிறது.

# உண்மையான ஐக்கியத்தை கூட்டணி அரசு உருவாக்கும்

## அமைச்சர் பீலிக்ஸ் உறுதி

கோட்டை, ஞாயிறு "கூட்டணி அரசாங்கம் நாட்டில் உண்மையான தேசிய ஐக்கியத்தைக் கட்டிவளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தேசிய ஒருமைப்பாடு அடித்தளத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டுமேயன்றி மேல்மட்டத்திலல்ல"

இவ்வாறு பொதுநிர்வாகம், உள்ளூராட்சித்துறை அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினார். கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெற்ற சேர், அருணாசலம் மகாதேவாவின் உருவப்படத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா உரைநிகழ்த்தினார்.



தும்வகையில் உண்மையான ஒருமைப்பாட்டை நிலைநாட்ட எமது கூட்டுமுன்னணி அரசாங்கம்பிரதிக்ஞை எடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

நாட்டில்சகலரும்மகிழ்ச்சியுடன் வாழும் வகையில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த சகல இனத்தவர்களும் ஒரேபங்குதாரர்களாக உழைக்கவேண்டும் என்றார் அமைச்சர்.

பிரதம மந்திரி தமது நிரந்தரக் காரியதரிசியாக ஒரு தமிழரை நியமித்துள்ளார். நானும் ஒரு தமிழரை நிரந்தரக் காரியதரிசியாகத் தெரிவுசெய்துள்ளேன். சமீபத்தில் ஒரு தமிழர் ... கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவையாவும் தகுதியின் அடிப்படையிலேதா... செய்யப்

### சிறுபான்மைத் தமிழர் மகாசபை

## தூது கோஷ்டி இன்று பிரதமரைச் சந்திக்கும்

யாழ்ப்பாணம், திங்கள் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை தூதுகோஷ்டி இன்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை சந்திக்கிறார்கள்.

சிறுபான்மைத் தமிழ் மக்களை எதிர்நோக்குகிற முக்கிய பிரச்னைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்கள்.

சிறுபான்மைத் தமிழ் மகாசபைத் தலைவரும் நியமன எம். பி.யுமான திரு எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில் பிரதமரைச் சந்திக்கும் இத்தூதுகோஷ்டியில் திரு. எஸ். கே துரைசிங்கம், திரு. எம். செல்லையா, நிர்வாகக் காரியதரிசி திரு எஸ், செல்லையா, திரு. பி. ஜே. அன்ரனி திரு. எஸ். இராசையா ஆகியோர் அங்கம்வகிப்பர்

(கு வி ம)

## புதிதாக சேரும் மாணவர்க்கு மருத்துவச் சோதனை

கோட்டை, ஞாயிறு அடுத்த ஆண்டில் பாட ... கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் ...

## 100 புதிய உபதபால்கந்தோர்

கோட்டை, ஞாயிறு 1971-ல் இலங்கை பூராவும் மேலதிகமாக 100 உபதபாற் கந்தோர்கள் இ...

## ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், திங்கள் திருநெல்வேலி அம்மன் வீதியைச் சேர்ந்த சபாபதி சிவரத்தினம் (36 வயது) மண்டையில் பலத்த வெட்டுக்காயத்துடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த இரவு காயமடைந்தவருடன் இருவர் வந்து தங்கியிருந்ததாகவும், மறுநாள் அதிகாலை பார்த்தபோது மகன் வெட்டுக்காயத்துடன் மயங்கிய நிலையிலிருந்தாரென்றும் காயமடைந்தவரின் தாயார் சின்னம்மா பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களான இருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

(கு. வி, ம.)

## காலமானார்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பகுதியில் சமூகசேவையிலீடுபட்ட பெண்மணிகளுள் முன்னோடியாகத் திகழ்ந்த திருமதி மங்களம்மா மாசிலாமணி காலமாகிவிட்டார்.

நீண்டகாலமாக தமிழ் மகள் என்ற பெண்மணிகளுக்கான பத்திரிகையை இவர் நடத்திவந்துள்ளார். நாட்டின் தேசிய இயக்கங்களில் பங்குகொண்டவர் தமிழ் வழர்ச்சி, சமூகசேவை ஆகிய துறைகளில் பன்னெடுங்காலம் இவர் ஈடுபட்டுள்ளார்.

## பாடசாலை வளர்ச்சியையும் கருத்தில்கொள்ளவேண்டும்

### பெற்றோருக்கு வேண்டுகோள்

முசலி, ஞாயிறு "ஒரு கிராமத்தின் பாடசாலை அக்கிராமத்தின் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மாத்திரம் மட்டுமல்ல அக்கிராமத்துக்கே அறிவு புகட்டும் ஒரு கல்விச் சாலையாகவும் விளங்குகிறது. பெற்றோர் பாடசாலையின் குறை நிறைகளை கல்வி இலாகாவுக்கு எடுத்துக் காட்டுவதோடும் நின்றுவிடாமல் தங்கள் கிராமத்திலுள்ள பாடசாலையின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். தன்கடமையைச் செய்யாத எவனும் உரிமை பெற்று வாழ முடியாது.

சாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்த விழாவில் இப்பகுதி வட்டார கல்வி வித்தியாதிகாரி திரு. வீ. கே. ஈஸ்வரபாதம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விழாவுக்கு பண்டிவிரிச்சான் தேவாலய தலைமைக் கட்டளைக் குரவர் வண. பிதா மரியாம்பிள்ளை இராயேஸ்வரன் தலைமை வகித்தார். இப்பாடசாலை தலைமையாசிரியர் திரு. மரியாம்பிள்ளையும் உரையாற்றினார். இவ்விழாவையொட்டி பாடசாலை மாணவ மாணவிகளின் கும்மி, கோ...

### 2-வது கிரிக்கெட் 'டெஸ்ட்'

## ரெத்பாத் செஞ்சரி

### ஆஸ்: 355—6

பேத், டிச 13 ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில், ஆஸ்திரேலியாவில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியின் 3-வது நாளான இன்று ஆஸ்திரேலியா தனது முதலாது இன்னிங்ஸில் ஆட்டம் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரெத்பாத் மிகநிதானமாகத் துடுப்பெடுத்தாடி 159 ஓட்டங்களுடனும், மார்ஷ் 6 ஓட்டங்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக சேரும் மாணவர்க்கு மருத்துவச் சோதனை

கோட்டை, ஞாயிறு

அடுத்த ஆண்டில் பாடசாலைகளில் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

மாணவர்களை பாடசாலைகளில் சேர்க்குமுன்னர் பாடசாலை அதிபர்கள் மாணவர்கள் கல்வி, சுகாதார இலாகாக்களினால் பரிசோதனை செய்யப்பட்டுள்ளார்களா என்பதைக் கவனிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் 3000 பாடசாலைகளில் 250,000 மாணவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதிகமான மாணவர்கள் பார்வையிலும், கேள்விஞானத்திலும் குறைபாடுடையவர்களாகவும் பல்வருத்தம் உடையவர்களாகவும் காணப்படுகிறது என கல்வி, சுகாதார இலாகா தெரிவித்துள்ளது.

## 100 புதிய உபதபால்கந்தோர்

கோட்டை, ஞாயிறு

1971-ல் இலங்கை பூராவும் மேலதிகமாக 100 உபதபாற் கந்தோர்கள் திறக்கப்பட உள்ளன. தொடர்ந்து 200 உபதபால் அதிபர்களையும், 250 தபால் பியோன் மார்களையும் 100 தபால் கொண்டு செல்லும் ஊழியரையும் தெரிவுசெய்ய தபால் தந்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

...—

## மறைவு

கொழும்பு, திங்கள்

கொழும்பு சிரேஷ்ட அறுவை வைத்திய நிபுணர் டாக்டர் ஜி. எஸ். சின்னத்தம்பி கொழும்பு ஆஸ்பத்திரியில் நேற்றுக்காலமானர். அவருக்கு வயது 78. இன்று திங்கள் அவரது பூதவுடல் கொழும்பில் அடக்கஞ்செய்யப்படும். [சி. பி ஏ]



கடந்த காலத்தில் கொழும்பில் ஒருசிலர் மத்தியில் நிலவிய ஐக்கியத்தைத் தவிர, உண்மையான தேசிய ஐக்கியம் நிலவவில்லை. என்று அமைச்சர் கவலை தெரிவித்தார். நாட்டின் துரிதமான பொருளாதார வளர்ச்சியை உறுதிப் படுத்த நிரந்தரக் காரியதரிசியாகத் தெரிவுசெய்துள்ளேன். சமீபத்தில் ஒரு தமிழர் அசைஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவையாவும் தகுதியின் அடிப்படையிலேதான் செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் சுட்டிக்காட்டினர்

அரசகரும மொழியில் தகுதிபெறத் தவறிய புதிய அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் அவகாசம் கொடுக்கும்படி அரசாங்க சேவைக் கமிஷனுக்கு உத்தரவிட்டிருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்

கூட்டத்தில் நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு மைத்

(4-ம் பக்கம் பார்க்க)

நின்று விடாமல் தங்கள் கிராமத்திலுள்ள பாடசாலையின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். தன்கடமையைச் செய்யாத எவனும் உரிமை பெற்று வாழ முடியாது.

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய பண்டிவிரிச்சான் தமிழ் கலவன் பாடசாலை இராமேஸ்வரன் தலைமை வகித்தார். இப்பாடசாலை தலைமையாசிரியர் திரு. மரியாம்பிள்ளையும் உரையாற்றினர். இவ்விழாவையொட்டி பாடசாலை மாணவ மாணவிகளின் கும்மி, கோலாட்டம், நடனம், நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

6 விக்கெட்டுகளை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரெத்பாத் மிகநிதானமாகத் துடுப்பெடுத்தாடி 159 ஓட்டங்களுடனும், மார்ஷ் 6 ஓட்டங்களுடனும் தொடர்ந்து ஆடுகின்றனர்.

இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 397 ஓட்டங்களைப் பெற்றது.

நாளை ஓய்வுநாள் ஆட்டம் நடைபெருது.

# சமசமாஜக்கட்சியின் 35-வது ஆண்டுநிறைவுவிழா

கோட்டை, ஞாயிறு

லங்கா சமசமாஜக் கட்சியின் 35வது வருடநிறைவு விழா கொண்டாட்டம் கொழும்பு நகரமண்டபத்தில் இம்மாதம் 19-ம்தேதி நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பிரதமர் திருமதிஸ்ரீமாவோபண்டாரநாயகா பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுவார். இலங்கைகம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. எஸ் ஏ. விக்கிரமசிங்காவும் கலந்து கொள்வார்.

அன்று காலை சுகததாசா ஸ்ரேடியத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி: சில்வா தலைமையில் கூட்டம் நடைபெறும் என்றும் அக்கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா திரு லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் உரை ஆற்றுவர் என்றும் தொடர்ந்து பொதுக் கூட்டம் நகரமண்டபத்தில் நடைபெறும் என்றும் ஆட்சிமன்ற உறுப்பினரும் ல. ச ச. கட்சியின்பொதுக் காரியதரிசியுமான திரு. பெர்ணுட் சொய்சா தெரிவித்துள்ளார்.

## லூனு கோட்—1

# சூரியோதயக் காட்சியை படம் பிடித்தனுப்பியது

மாஸ்கோ, டிச. 13

ரஷ்யா சந்திரத்தரையில் இறக்கியுள்ள லூனு கோட்-1 என்ற கலம் சந்திரத் தரையில்மேலும் 90 யசர் தூரத்தை நகர்ந்து கடந்திருக்கின்றது.

கடந்தமாதம் லூனு-17 ஆளில்லா கலத்தின் மூலம் சந்திரனுக்கு அனுப்பப்பட்ட லூனு கோட்-1 சந்திரனில் குளிர்மிகுந்த இரவை வெற்றிகரமாகக் கழித்தபின்னர் இப்பொழுது மீண்டும் இயங்கத் தலைப்பட்டிருக்கின்றது.

சூரியன் உதயமாகும் காட்சியையும் சந்திரத் தரையையும் படம் பிடித்து பூமிக்கு அனுப்பியிருக்கின்றது. இக்கலம் இன்னும் பல சாதனைகளை நிகழ்த்தவிருப்பதாக நம்பப்படுகின்றது.

## விஞ்ஞானத்தில்

# ஆங்கிலச் சொற்களை பயன் படுத்தலாம்

## நெடுஞ்செழியன் கருத்து

சென்னை, டிச. 13

தொழில்நுட்ப, விஞ்ஞான வளர்ச்சிகளை அறிந்துகொள்வதற்கு ஆங்கில அறிவு நமக்குத் தேவைப்படுகின்றது என்றாலும் இன்று நடைமுறையில் இருக்கும் கேள்வித்தாள்களுக்கு பதிலளிக்கும் முறையை மாற்றி மாணவர் மத்தியில் சிந்தனையையும் ஆக்க சக்தியையும் வளர்க்கும் விதத்தில் கல்லூரிகளில் தமிழில் போதனை நடத்துவதற்கு இப்பொழுதாவது நடவடிக்கை எடுத்துத் தானாக வேண்டும் என்று தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் கூறினர்.

திருச்சி தேசியக் கல்லூரியின் பொன்விழாவில் திரு நெடுஞ்செழியன் உரை நிகழ்த்தினர்.

சகல சர்வதேசச் சொற்களையும், விஞ்ஞான சொற்களையும் தூய தமிழில் மொழி பெயர்த்துத் தான் ஆகவேண்டும் என்பது அவசியமில்லை. அச்சொற்களை அப்படியே உபயோகப் படுத்தலாம். உதாரணத்துக்கு இலக்ரோன்ஸ், புரோட்டோன்ஸ் போன்றவைகளை அப்படியே பயன் படுத்தலாம் என்று திரு. நெடுஞ்செழியன் கூறினர்.

வெளிநாடுகள் அடைந்துள்ள வளர்ச்சியை நாமும் எட்டிப் பிடிக்கும் வரை ஆங்கிலச் சொற்களையும் தமிழோடு சேர்த்து மாணவர்கள் பயன்படுத்தலாம் என்றூர் அமைச்சர்.

தமிழ் இலக்கியத்தை பௌதிகம், தாவரவியல், விலங்கியல் ஆகியவை மூலம் வளர்த்துவிட முடியாது என்பதை நாங்கள் உணர்வோம். நாம் விரும்புவது என்னவென்றால் தமிழர்கள் வெளிநாடுகளிலுள்ளவர்களுக்கு பின்னடையாமல் இருக்கும் வகையில் விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தப் படல் வேண்டும் என்பதே. எனவே படிப்படியாகத் தமிழை நாம் பயன் படுத்தாமல் போனல் பிறகு எப்பொழுதுதான் இதை ஆரம்பிக்கப்போகிறோம். என்று அவர் கேட்டார்.

## நிவாரணம்

நுவரெலியா, ஞாயிறு

வலப்பனைத் தொகுதியிலும் நுவரெலியாவிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிடவசதி, உணவு, உடை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதியில் நோய்பரவாமல்பாது காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நுவரெலியா மாவட்ட சுகாதார அத்தியட்சகர் கேட்கப்பட்டுள்ளார்.

# "இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்"

## கொடிகாமம்கொலைவழக்கில்சாட்சியம்

மட்டுவில், ஞாயிறு

"நான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றபோது சூடுபட்டு, இராஜூ நிலத்தில் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். நான் அங்கு சென்றதும் வேண்டிய பந்தோபஸ்துக்களை எடுத்துக்கொண்டதுடன் இதற்கான தடயங்களையும் சேகரித்தேன்."

இவ்வாறு சாவகச்சேரிப் பொலிஸ்நிலைய அதிபர் திரு. நடராஜா கதிர்காமநாதன். கொடிகாமம் இராஜூ கொலைவழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

சாவகச்சேரி நீதவான் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொடிகாமம் ஆறுமுகம் கனகரத்தினம் என்ற ராஜூ கொலை வழக்கில், கொடிகாமத்தைச் சேர்ந்த சாமி என்றழைக்கப்படும் எஸ். கந்தையா, வல்லிபுரம் உட்பட மூவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இப்பகுதியில் மிகவும் பரபரப்பை உண்டு பண்ணியிருந்த இந்த வழக்கைக் காண நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் சனக்கூட்டம் நிறைந்திருந்தது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கதிர்காமநாதன் தொடர்ந்து தமது சாட்சியத்தில் கூறியதாவது:

இரவு 11-30 மணியளவில் இக்கொலை சம்பந்தமான தகவல் கிடைத்தது. நான் உடனே ஸ்தலத்திற்குப் பொலிஸ்கோஷ்டியுடன் விரைந்தேன். இக்கொலை வழக்கில் முக்கிய சாட்சியத்தின் தடயமான ஒரு 'டோர்ச் லைட்'டைப் பாரமெடுத்தேன். மேலும் பல துப்பாக்கிக் குண்டுகளையும் கண்டெடுத்தேன். இறந்தவர் வேட்டியை மடித்துக் கட்டியபடி ஒரு துவாயையும் மேலில் போட்டிருந்தார். அவரின் வலது தோள் பட்டைக்குக் கீழும் குண்டு கண்டெடுத்தேன். இதற்கு முக்கிய சாட்சியங்களையும் பதிவுசெய்தேன்.

மேல் விசாரணையை மாஜிஸ்திரேட் ஒத்திவைத்தார்.

———

## 'அரசு பாரபட்சம் காட்டியுள்ளது'

மண்டைதீவு, ஞாயிறு

பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தில் தமிழருக்குப் பாரபட்சம் காட்டியுள்ளது இந்த அரசாங்கத்தில் நீதியும் நேர்மையும் திறமையும் புறக்கணிக்கப்படுகிறது. என்று தீவுப்பகுதி எம் பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் மண்டைதீவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

## மீனவருக்கு வீடமைப்புத் திட்டம்

கோட்டை, திங்கள்

மீனவர்களின் வீட்டுப்பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கான ஆலோசனைகளைத் தெரியப்படுத்துமாறு கடற்ருெழில் அமைச்சர் திரு ராஜபக்சா கரையோரப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களிடம் கோரியுள்ளார்.

மீனவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கக்கூடிய வசதியானஇடங்களைத்தெரிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார் இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை கடற்ருெழில் அமைச்சர் வீடமைப்பு அமைச்சருடன் நடத்தி வருகிருர்.

திரு மு நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை பெற்ருர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு எம் பி பேசினர்.

# ஜி. சி. ஈ. வினைத்தாள் வெளியாகவில்லை

## பத்திரிகைச் செய்திக்கு ஆணையாளர் மறுப்பு

கோட்டை, ஞாயிறு

கண்டியிலுள்ள பரீட்சை நிலையமொன்றில் நேற்று நடைபெற்ற ஜி சி ஈ சாதாரணபரீட்சையில் கைப்பணி வினுத்தாளுக்குப் பதிலாக சுகாதாரமும் சரீரசாஸ்திரமும் பாடத்துக்குரிய வினுத்தாள்கள் மாறிக் கொடுக்கப்பட்டதாக பத்திரிகை ஒன்றில் ('ஈழநாடு' அல்ல) வெளியான செய்தியில் உண்மையில்லையென்று பரீட்சைப் பகுதி ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கைப்பணி வினுத்தாள்களுக்குப் பதிலாக, சுகாதாரமும் சரீரசாஸ்திரமும் பாடத்துக்குரிய வினுத்தாள்கள் நான்கு பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டுவிட்டதாக அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்ததாயும் அதில் எதுவித உண்மையுமில்லை என்றும் பரீட்சைஆணையாளர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஒல்லாந்தர் மயானம் யாழ். மாநகரசபைக்கு சொந்தமாகும்

— நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் அதிகாரிகளின் இடுகாடாக இருந்த இருபத்திஞன்கு பரப்பு காணி யாழ். மாநகரசபையிடம் கையளிக்கப்படும்.

யாழ். மாநகரசபைக்குப் பின்புறத்திலுள்ள இந்தக் காணியை யாழ். மாநகர சபையிடம் ஒப்படைக்கும்படி யாழ். நூதனசாலை பொறுப்பதிகாரிக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதுவரை காலமும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவின் பொறுப்பில் இந்தக் காணி இருந்து வந்துள்ளது. யாழ். மாநகரசபை நீண்டகாலமாக இக்காணியை ஒப்படைக்கும்படி அரசாங்கத்தை கோரிவந்துள்ளது.

ஒல்லாந்த தூதுவராலய அதிகாரிகள் நேற்று இக்காணி அமைந்துள்ள பகுதிக்கு விஜயம் செய்தனர்.

இந்த இடுகாட்டில் உள்ள சின்னங்கள், புதைபொருட்கள் போன்றவை யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையிலுள்ள தேவாலயத்திற்கு இடமாற்றப்படும். இந்தச் சின்னங்கள் படம்பிடிக்கப்பட்டும், எழுத்துக்கள், பொருட்கள் ஆராய்ச்சி செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புக்கள்:
G. C. E. (Advance-Level) வகுப்புகளும் G. A. Q. வகுப்புகளும் இலங்கை பட்டதாரி ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன. விபரங்கட்கு: கணக்கியல் கல்லூரி, 278&280, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2428

### விற்பனைக்கு

காணி:
யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் காங்கேசன்துறை வீதியில் கடையும் கட்டிடமும் அமைத்துள்ள ஒரு பரப்பும் 15 குழியும் உள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. விளம்பர இல: 2429, மே/பா 'ஈழநாடு', த. பெ. எண். 49, யாழ்ப்பாணம். 2429

## இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு
சுழிபுரம், தொல்புரம், மூளாய் ஆகிய பகுதிகளின் சுகாதார பரிசோதகராக கடமையாற்றிய திரு. என். சுப்பிரமணியம் புத்தளம் பகுதியைச் சேர்ந்த கற்பிட்டிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கிளிநொச்சிக்கு நவீன சந்தை

கிளிநொச்சி, ஞாயிறு
கிளிநொச்சியில் நவீன சந்தை ஒன்றை அமைக்க பட்டின சபையினர் வரவு செலவுத் திட்டத்தில் பண மொதுக்கியுள்ளனர்.

தற்போது உள்ள இடத்திலேயே புதிய சந்தையை 50,000 ரூபா செலவில் அமைக்க கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளது, இவ்வேலைகள் பல கட்டங்களில் நிறைவேறும்.

......

## ஓய்வு

சுழிபுரம், ஞாயிறு
சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை தலைமையாசிரியராகக் கடமையாற்றிய பிரம்மஸ்ரீ சு சண்முகரத்தினசர்மா இவ்வாண்டுடன் தலைமையாசிரியர் பதவியில் இருந்து இளைப்பாறுகிறார். பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் பிரிவுபசார விழாவை நடத்தினர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பகுதியோடு தொடர்புடைய இவர் சமயப் பணியும் செய்துவந்தார்.

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்,
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
காதல் பறவை

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா —அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.

# கல்வி பற்றிய கருத்தரங்கு

# "தனியார் பாடசாலைகளுக்கு சோஷலிச நாட்டில் இடமில்லை"

— ஏ. எஸ். கனகரத்தினம்

# 'உயர் கல்வி பெறுவோர் இந்நாட்டில் மிகக்குறைவு'

— ஆரியவன்சா

யாழ்ப்பாணம், புதன்
'1968ம் ஆண்டு பல்கலைக் கழக பிரவேசத்திற்கு 4 பாடங்கள் சித்தியடைந்த மருத்துவ மாணவர் 240 பேர் தெரிவு செய்யப்பட்டனர் இவர்களில் 173 பேர் தனியார் பாடசாலைகளிலிருந்தும், 67பேர் அரசாங்களிலிருந்தும் தோற்றினார்கள். இந்நிலையில், சகல மாணவர்களுக்கும் கல்வியில் சமசந்தர்ப்பமளிக்கப்படுகிறதென கூற முடியுமா?

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்க செயலாளர் திரு. ஆரியவன்சா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க கைலாசபதி தலைமையில் நடந்த இவ்விழாவை வட மாநிலக்கல்வி அதிபதி திரு. வி. சங்கரலிங்கம் விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

திரு. ஆரியவன்சா மேலும் கூறியதாவது: பொருளாதார அபிவிருத்தி போதியளவு இல்லாததினால்தான் இந்நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டத்தினால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். உத்தியோக வாய்ப்பு இருக்க வேண்டுமானால் பொருளாதார அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் கல்வி, பொருளாதார வளர்ச்சியின்றி ஒரு நாடு என்றும் முன்னேறாது.

### அமெரிக்கா பாராட்டு

சோவியத் நாடுகளிலுள்ள கல்வி முறையை ஐக்கிய அமெரிக்காகூட பாராட்டுகிறது. கூடுதலான மாணவர்கள் அங்கு உயர்கல்வி பெறுகின்றார்கள். அவர்களின் தேவைகள் அங்கு பூர்த்தி செய்யப்படுகின்றன.

எங்கள் நாடு நீண்டகாலம் முதலாளித்துவதின் கீழ் இருந்து வந்ததால் கல்விமுறை முதலாளித்துவ அமைப்பில் இயங்கி வந்துள்ளது. காலனி ஆட்சிமுறையை நடத்துவதற்காக விகிதர் ஆசிரியர் போன்றவர்களை உருவாக்க கூடிய கல்விமுறையே இருந்துவந்தது கல்வி முறையில் மட்டுமல்ல வேறுபலவிதத்திலும் கஷ்டத்தை கொடுத்துள்ளது. 2வது யுத்தத்தின் பின் சுதந்திரமடைந்த 17 நாடுகள் முன்னேற்றமடைய வேண்டியநிலையில் உள்ளன சில நாடுகளில் மட்டும் முன்றம் காணப்படுகிறது.

கல்விமுறையில் உள்ள குறைபாடுகள் பற்றி முதலில் அறிய வேண்டும் ஆசியாவில் உள்ள சில நாடுகளில், இலவசக்கல்வியளிக்கப்பட்டுவருகிறது. இந்த இலவசக் கல்வியினால் சகல மாணவர்களுக்கும், சம சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் கூறமுடியாது கல்விக்காக 50 கோடிரூபா செலவிடப்படுகிறதாக கூறப்படுகிறது. ஆனால் தனியார் பாடசாலைகளில் பயிலும் பணக்கார வீட்டு பிள்ளைகளும் தனிப்பட்ட முறையில், போதனை பெறும் மாணவர்களுமே, சித்தியடைகிறார்கள். தனியார் கல்லூரி மாணவர்களே கூடியளவில் பல்கலைக்கழகம் செல்கிறார்கள் ஏழை மாணவர்கள், பணம் கொடுத்து தனியார் கல்லூரியில் படிக்கவோ தனிப்பட்ட முறையில் போதனை பெறவோ முடியாததால். பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள் இந்த நிலைமை மாற வேண்டும்.

### நூற்றுக்கொரு மாணவன்

இந்த நாட்டில் 14,000 கலைப்பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதாக கூறப்படுகிறது. மற்றநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த நாட்டில் நூற்றுக்கு ஒரு மாணவனே உயர் கல்வி பெறுகின்றான். சோஷலிச நாடுகளில் நூற்றுக்கு 8 அல்லது 9 மாணவர்கள் உயர்கல்வி பெறுகிறார்கள்.

இந்நாடு சோஷலிசபாதையில் முன்னேற, இங்குள்ள முதலாளித்துவ முறைகள் மாற்றப்படவேண்டும், எல்லாருக்கும் உணவு உடை இருக்கவீடு கிடைக்க வழி செய்யப்படவேண்டும்.

கட்டாயக் கல்வி

யத்துவம் வாய்ந்த அக்டோபர் புரட்சி பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஆதலால் இப்படியான குறைபாடுகளை நீக்கி, பற்பல நாடுகளில் நடந்த அரசியல் வளர்ச்சி பற்றி நமது மாணவர்கள் அறியக்கூடியதாகப் பாடப் புத்தகங்கள் இருக்கவேண்டியது அவசியம்.

### சோஷலிஸம் மறையாது

திரு. ஹன்டி பேரின்பநாயகம் பேசுகையில் கூறியதாவது: "சோஷலிஸம் மறையப்போவதில்லை அதை அழிக்கக்கூடிய சக்தி இப்போது எங்குமில்லை, பல நாடுகள் சோஷலிஸ அமைப்பை நோக்கிச் செல்கின்றன. இப்பொழுது உலகில் விளம்பர வசதி, போக்குவரத்து வசதி, செய்தி பரப்பும் வசதி இருக்கும்போது எதையும் மூலையில் மறைக்க முடியாது. இலங்கையை மட்டுமல்ல, தென்னாபிரிக்காவையும் சோஷலிஸம் தாக்கும்.

1956ம் ஆண்டு இந்த நாட்டில் புரட்சி நடக்குமென எவருமே எதிர்பார்க்கவேயில்லை சகல துறைகளிலும் இன்று சோஷலிஸம் தலைதூக்கியுள்ளது. ஆத்மீகத்துறையிலும்சோஷலிஸம் இருந்துள்ளது. உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், படுக்கப் பாயும்தான் வேண்டுமெனக் கூறுவது மட்டும் சோஷலிஸம் என நான் சொல்லவில்லை. வாழ்வின் நோக்கு இவற்றுடன் முடியப்போவதில்லை.


இன்று காலம் மாறிவருகிறது. மாணவர்கள் படித்தது வேறு; நம்பியிருந்தது வேறு. இன்று அவர்கள் வேறு விதமாகக் கேட்கிறார்கள். நான் படித்த காலத்தில் ஆசிரியருடன் முரண்பாடு ஏற்பட்டபோது தான் சொல்வதை ஏற்கவேண்டுமென ஆசிரியர் கூறினார். ஆனால் இன்று மாணவர்கள் அங்களையும் கலந்தாலோசிக்கும்படி கேட்கிறார்கள்...

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத்திருடன்

ஸ்ரீகாலிங்கன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
திங்கள் 14—12—70
(செய்திகள் காலை 6-45, பகல் 12-..., மாலை 6-00, இரவு 9-...)

## 'சிறந்த விளையாட்டு வீரர்'



யாழ்ப்பாணம், திங்கள்
பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில், 40 வயதுடைய திரு. எஸ். எஸ். செபரத்தினம் 'சிறந்த விளையாட்டு வீரர், என்ற விருதைப் பெற்றார். இவர் இவ் விருதை கடந்த இரு வருடங்களாக தொடர்ச்சியாகப் பெற்று வந்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில், திரு. செபரத்தினம் உதைபந்தாட்டம், கிரிக்கெட், டெனிஸ், ரேபின் டெனிஸ் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்று, பல வெள்ளிக் கிண்ணங்களைப் பரிசாகப் பெற்றார்.

திரு. எஸ். எஸ். செபரத்தினம் பரந்தன் இராசாயனத் தொழிற்சாலையில் சிரேஷ்ட உதவி உற்பத்தி அதிபராகக் கடமையாற்றுகிறார்.

கிளிநொச்சிப் பகுதியிலும், அதனைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களிலும் நடக்கும் விளையாட்டு வைபவங்களில் பங்குபற்றி ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றார்.

'தேவா'

உதைபந்தாட்டம்

# அளவெட்டி கோஷ்டி அமோக வெற்றியீட்டியது

மாவிட்டபுரம், ஞாயிறு
மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக்கழகமும், அளவெட்டி மத்தியவிளையாட்டுக் கழகமும் மோதிய 1-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் அளவெட்டிக் கோஷ்டி 7-3 கோல்களால் அமோக வெற்றி பெற்றது.

அளவெட்டி விளையாட்டுத் திடலில் நடந்த இப்போட்டியில் அளவெட்டிக் கோஷ்டியைச் சேர்ந்த முருகையா, ஜெயானந்தன் ஆகியோர் திறமையாக விளையாடினார்கள். இப்போட்டிக்கு திரு. பாலேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகமும், அண்ணா விளையாட்டுக்கழகமும் 3-ம் பிரிவில் மோதிய வேறொரு போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் 1-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. சுந்தரலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

......

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்
வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச்சபையின் 6-வது வருடாந்தக்கூட்டம் தலைவர் திரு. த. இராசரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு த. இராசரெத்தினம் உபதலைவர்: சு நாராயணன்! காரியதரிசி: க ஹரிஹரன் உபகாரியதரிசி: டி. முத்தையா தனாதிகாரி: திரு. மு. நடராஜா உபதனாதிகாரி: சு. சந்திரன் சபைப்பிரசாரகர்: கை. சோமசுந்தரம் சபைப்பொருப்பாளர்; இ. சிவானந்தம்.

கூறினார்கள் இன்று லத்தீன் இல்லாமல் டாக்டர் பட்டம் பெற்றவர் சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்ற வில்லையா? லத்தீன் இல்லாமல் சட்டம்பயின்று வழக்கறிஞரானவர் கோர்ட்டில்...

## இன்றைய பலன்

கார்த்திகை மீ 29-ந் திகதி
(14-12-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ



முத்துராமன்
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்
கண்ணன் என் காதலன்
தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

தினசரி 2-30, 6-30, 9-30
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத்திருடன்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சிவாஜி -- சரோஜாதேவி
நடித்த
புதியபறவை

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p.m.
Poya days 4 shows
Michael Caine
Noel Coward
in
"THE ITALIAN JOB"
(Panavision-color)

REGAL
Jaffna
Daily 4-45,7&9-45p.m.
Poya days 4 shows
Richard Widmark
in
THE LONG SHIP
(Techni-color)

## கூட்டுத்தாபனம்

### திங்கள் 14-12-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-30)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாமாலை, 6-30 உலகவலம், 7-00 திரைகானம், 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

யில் முன்னேற, இங்குள்ள முதலாளித்துவ முறைகள் மாற்றப்படவேண்டும், எல்லாருக்கும், உணவு உடை இருக்கவீடு கிடைக்க வழி செய்யப்படவேண்டும்.

### கட்டாயக் கல்வி

5 வயதிற்கும் 14 வயதிற்கும் உட்பட்ட பிள்ளைகளுக்கு கட்டாய கல்வி வசதி யளிக்கப்பட வேண்டியது அவசியம், சில பெற்றோர்கள் வசதிக்குறைவினால் தங்கள் பிள்ளைகளை, பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அரசாங்கம், சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். கூடுதலான பிள்ளைகளுக்கு கல்வி வசதிகள் அளிக்கவேண்டும்.

71-ம் ஆண்டு பாடசாலைக்கு செல்லும் மாணவன் 80-ம் ஆண்டு, கல்லூரியை விட்டு வெளியேறும் போது சமுகநிலை, இன்றைய நிலை போல் இருக்குமா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆதலால், அதற்கேற்றவகையில் கல்விமுறை அமைக்கப்பட வேண்டும்.

சரித்திர வரலாறு பற்றிய 8ம் வகுப்புப் புத்தகத்தில், மனித வரலாற்றில் முக்கி தில் ஆசிரியருடன் முரண்பாடு ஏற்பட்டபோது தான் சொல்வதை ஏற்கவேண்டுமென ஆசிரியர் கூறினார். ஆனால் இன்று மாணவர்கள் தங்களையும் கலந்தாலோசிக்கும்படி கேட்கிறார்கள். மாணவர்களின் விருப்பு வெறுப்புகளை ஆசிரியர்கள் அறியவேண்டும். கல்வித் துறையில் மாணவரின் ஒத்துழைப்பு இருக்கவேண்டும்.

### மார்க்ஸிஸம் வேண்டும்

திரு ஏ. எஸ். கனகரத்தினம் பேசியதாவது: ஒவ்வொரு கல்லூரிகளிலும் மார்க்ஸிஸம் கட்டாயம் படிப்பிக்கவேண்டும். எந்தச் சோஷலிஸ நாட்டிலும் அங்குள்ள கல்லூரிகளில் மார்க்ஸிஸம் படிப்பிக்கப்படுகின்றது. அதிகமான ஆசிரியர்கள், தொழிலாளர் விவசாயிகளுடன் கலப்பது குறைவு. தங்களை மத்தியதர வகுப்பினராகவே கருதிக்கொள்கின்றன. இந்த நிலை மாறவேண்டும். ஆசிரியர்கள், தொழிலாளர் விவசாயிகளுடன் கலந்துரையாடவேண்டும்.

மாணவர்கள் தொழிற்சாலைகளில் வேலைசெய்ய வேண்டும். அப்பொழுது தான் தொழிலாளர் பற்றி அறியக்கூடிய நிலைமை ஏற்படும். மாணவர்கள் சிரமதானம் மூலம் களை பிடுங்குவதிலும் நாற்று நடுவதிலும் யாருக்கு நன்மை ஏற்படப் போகிறது. அது மாணவர்களுக்குகூட பயன்படாது மாணவர்கள் தொழிற்சாலைகளில் சிரமதானம் மூலம், வேலை செய்ய முன்வரவேண்டும்.

மாணவர்களுக்கு தொழில் நுட்பக்கல்வி கட்டாயம் தேவை சோஷலிச நாடுகளில் தனியார் தொழிற்சாலைகளில், அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி மாணவர்களுக்கு வேலை வசதி ஏற்படுத்தி கொடுக்கிறது. இதேபோல் இங்கும், தனியார் தொழிற்சாலைகளில் மாணவர்களுக்கு இடமளிக்கவேண்டும்.

### இராணுவப் பயிற்சி

வாலிபர்களுக்கு இராணுவப் பயிற்சி கட்டாயம் தேவை. வாலிபர்களுக்கு ஆயுதப்பயிற்சியளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். தொழில்நுட்ப கல்விக்கு ஆங்கிலம் அவசியமில்லை. என்பதே எனது கருத்து உங்கள் பாஷையிலேயே எல்லாத்தொழில் நுட்பக்கல்வியும் பெறலாம் றேடியோ திருத்துபவருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர் றேடியோ திருத்தவில்லையா?

முன்பு, மருத்துவபடிப்பிற்கும் சட்டப்படிப்பிற்கும் லத்தீன் தேவை என்று இல்லாமல் டாக்டர் பட்டம் பெற்றவர் சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்ற வில்லையா? லத்தீன் இல்லாமல் சட்டம்பயின்று வழக்கறிஞரானவர் கோர்ட்டில் வாதாடி வெற்றிபெற வில்லையா? இன்று லத்தீன் அவசியம் இல்லை என்று முடிவாகிவிட்டது. இதேபோல் தொழில் நுட்பகல்விக்கு ஆங்கிலம் தேவை இல்லை என்ற நிலைஏற்பட வேண்டும்.

### தொழிலுக்கு ஒரு சங்கம்

சோஷலிச நாடுகளில் ஒருதொழிலுக்கு ஒருசங்கம் தான் உண்டு தொழிலாளர்களை நம்பித்தான் சோஷலிச நாடுகள் முன்னேறுகின்றன. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு இருக்கவேண்டும்.

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படவேண்டும். ஆட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் உரிமை பற்றிநான் சொல்லவில்லை அரசாங்கம் செய்யும் பிழைகளை கண்டிக்க ஆசிரியர்களுக்கு உரிமை வேண்டும் ஆசிரியர்கள் அரசாங்கத்தை கண்டித்தால் அவர்களை இடமாற்றம் செய்யும் அந்திநீக்கப்பட வேண்டும்.

இன்று கல்வி நிர்வாகம் மந்திரிசபையில் இருக்கிறது. மந்திரி பதியுதீனில் ஆரம்பித்து. கலுகல்லைக்கு மாறி இரியகொல்லையிடம் சிக்கி இன்று மீண்டும் கல்வி நிர்வாகம் மந்திரி பதியுதீன் கைக்கு வந்துள்ளது. இது மாணவர்களின் கஷ்ட காலம் என்றுதான் கூற வேண்டும்.

யப்பான்இந்தியாபோன்ற நாடுகளில் மாணவர்கள் பெருமளவில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் இதேபோன்று தமிழ் மாணவர்களும் யாழ்ப்பாணத்தில் ஒரு சின்ன ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். மாணவர்கள் தரப்படுத்தப் பட்டதை அரசாங்கம் வெளிப்படுத்தினால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். பின்தங்கிய மக்களுக்கு சோஷலிச நாடுகளில் இடம் கொடுக்கப்படுவதுண்டு. அதேபோன்று இங்கும் நடைபெறவேண்டும்.

### தனியார் பாடசாலைகள்

தனியார் பாடசாலைகளுக்கு சோஷலிச நாடுகளில் இடமில்லை. இலங்கையில் உள்ள தனியார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும். சோஷலிசத்தை நாடி முன்னேறும் நாடுகளில் தனியார் பாடசாலைகள் இருக்ககூடாது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பலன்

கார்த்திகை மீ 29-ந் திகதி (14-12-70)

மேஷம்- எதிலும் புதுமையைக் காண விரும்புவீர்கள். துணிவையே துணையெனக் கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள்.

ரிஷபம்- அற்பவிடயத்திற்கும் ஆத்திரப்படுவீர் நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடும், அடக்கம்வேண்டும்,

மிதுனம்- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம், கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்வும்,

கடகம்- பொருளீட்டும் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம், அயலவர்களின் அன்பு உங்களை பரவசப்படுத்தும்,

சிம்மம்- தூக்கம் இமைகளைத் தழுவுவதற்கு மறுக்கும், இதயப்படுதாவில் இளமை நினைவுகள் மீண்டும் தலை தூக்கும்,

கன்னி- சுவையான சம்பவங்கள் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதையும் ஒழுங்கு முறையாகச் செய்வதில் திருப்தியடைவீர்கள்.

துலாம்- இதயத்தில் இனிமையான எண்ணங்கள் தவழும். கடந்தகாலச் சம்பவமொன்று எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி அமைக்கும்.

விருட்சிகம்- விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். தவறான வதந்திகளைப் பரப்புவதற்கு அவர்கள் முயற்சிசெய்யக்கூடும்,

தனுசு- எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக்கொள்ளும். ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போடுவார்கள், சிறப்பானதினம்.


மகரம்- முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்தவாக்கை காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள்.

கும்பம்- நீண்ட நாள் பிரச்சினையில் இன்று சமரச முடிவு காணப்படும் மற்றவர்கள் மதிப்பில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள்'

மீனம்- தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கு இலக்காவீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

யாழ். வின்ஸர் வெண்திரையில்
இப்பொழுது திரையிடப்படுகிறது! தினசரி 4 காட்சிகள்
★ ராஜன்
★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
★ கண்ணையா
★ ஆர். வாசு
★ புஸ்பமாலா
நடித்த
ஏன்?
டைரக்ஷன்:
ராமண்ணா





# பிரிட்டனில் அவசர கால நிலைமை:

## மின்சார ஊழியர் போராட்ட எதிரொலி

லண்டன், டிச. 13

லண்டன் மின்சாரத் தொழிலாளருடன் நடத்திய பேச்சுவார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தியுள்ளது. அவசரகால நிலைமை பிரகடனப் படுத்த எவ்வித அவசியமும் ஏற்படவில்லை என மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 125,000 ஊழியர்களைக் கொண்ட மின்சார ஊழியர் சங்கம் தமக்கு 30 சதவீத ஊதிய உயர்வு கோரி கடந்த் ஆறு நாட்களாக மெதுவாக வேலை செய்யும் இயக்கத்தை நடத்தி வந்தது இதனுல் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள், ஆஸ்பத்திரிகள் மற்றுமுள்ள ஸ்தாபனங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. பல நகரங்கள் இருளில் மூழ்கின மின்சாரத் தடையினுல் ஆஸ்பத்திரி அவசரத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருப்பதாகவும், தங்கள் சேவைக்கு இடையூருக இருப்பதாகவும் தெரிவித்துள்ளன. இந்த மெதுவாகச் செயல்படும் விடயத்தில் 28,000 தொழில் நுட்ப ஊழியர்களைக் கொண்ட சங்கம் ஒத்துழைப்பதில்லை என முடிவு செய்துள்ளது.

தொழிலாளர் அமைச்சர் திரு. ரொபேட் கார் கடந்த இரவு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடன் நடத்திய பேச்சுவார்தையைத் தொடர்ந்து அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தியுள்ளது. அரசாங்கம் இப்பிரச்னையை கூடி ஆராய்ந்த பின்பே இம்முடிவை எடுத்துள்ளது, இதன்படி மின்சார விநியோகம் முழுவதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது.

அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டதும், இதுதேவையற்ற ஒரு செயலாகுமென மெதுவாகவேலை செய்யும் தொழிற் சங்கத் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

— —

### "மீண்டும் இயங்கவேண்டும்"

மண்டைதீவு, சனி

கடந்த பல ஆண்டுகளாக இயங்காமலிருந்துவரும் மண்டைதீவு தெற்குக்-கிராம முன்னேற்றச்சங்கத்தை மீண்டும் இயங்கைவக்க வேண்டும் என்று 1500 பேர் கைச்சாத்திட்ட மகஜரொன்றினை மண்டைதீவு தெற்கு மக்கள் தீவுப்பகுதி காரியதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

### ஜோர்டானில் தலையிட வேண்டுகோள்

கெய்ரோ, டிச 14

ஜோர்டான் அரசாங்கப் படைகளுக்கும் பாலஸ்தீனக் கொரிலாக்களுக்குமிடையே நடைபெற்றுவரும் சண்டை மோசமானநிலையை அடையுமுன் ஜோர்டான் விடயத்தில் தலையிடுமாறு ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் திரு. சதாத்தையும், சிரியாப் பிரதமர் அசாத்தையும், அரபுக்கொமாண்டோத் தலைவர் திரு. அரபாத் கேட்டுள்ளார்.

— —

### ஓய்வு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றிய அன்னமேரி இவ்வருடத்துடன் ஓய்வு பெறுகிருர். இதனையொட்டி மேற்படி பாடசாலையின் ஆசிரியைகளால் பிரிவுபசாரம் நடாத்தப்பெற்றது.

# தெ. ஆபிரிக்காவுக்கு ஆயுதம் விற்கத்தான் வேண்டுமாம்

## பிரிட்டிஷ் மந்திரி கருத்து

லண்டன், டிச. 13

தென்னுபிரிக்கா தனது கடல் பிராந்தியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பிரிட்டன் உதவாமலிருப்பதாலுல் அதைப்போல முட்டாள்தனமிருக்க முடியாது என்று பிரிட்டிஷ்பாதுகாப்பு அமைச்சர் காரிங்டன் பிரபு கூறினுர்.

இந்து சமுத்திரத்தில் சோவியத்யுத்தக் கப்பல்கள் நடமாடுவதற்கு எதிர் நடவடிக்கை எடுக்காமல் விடுவது தவறு என்று காரிங்டன் பிரபுகுறிப்பிட்டார். பி. பி. ஸி. வானெலி பேட்டியொன்றில் காரிங்டன் பிரபு இந்தக்கருத்துக்களை வெளியிட்டார்.

தென்னுபிரிக்காவைச் சுற்றியுள்ள கடல்பகுதியைக் காப்பாற்றுவதற்கான உடன்பாடு ஒன்று இருக்கின்றது. இந்த உடன்பாட்டின்படி அவர்களுக்கு நாம் சில உபகரணங்களைக் கொடுத்து வாக்குறுதிகளை நிறைவேற்றத்தான்வேண்டும். தென்னுபிரிக்கா மாத்திரமே அந்தப் பிரதேசத்தில் கடற்படையொன்றை வைத்திருக்கின்றது. அந்தநாட்டுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ருமல் விடுவதாயின் அதைப்போல் முட்டாள்தனமிருக்க முடியாது என்ருர் அவர்.

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்கப்போகிறீர்களா? விற்றுத்தானுகவேண்டுமா என்று கேட்டபொழுது "நான் அந்த அளவுக்குப் போய் எதுவும் சொல்வதற்குஇல்லை. ஏனென்ருல் இன்னும் இதுபற்றிய தீர்மானம் எடுக்கப்படவில்லை. ஆனுல் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான சரியான காரணங்கள் உண்டு என்று நான் கருதுகிறேன் என்ருர் அவர்.

— —

### ஓய்வு பெறுகிருர்

வல்வெட்டித்துறை ஞாயிறு

புலோலிமேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் 38 ஆண்டுகளாக தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. மா. சுப்பிரமணியம் இம் மாதம் 31-ம் திகதியுடம் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிருர்.

சமயப் பணியிலும் சமூகப் பணியிலும் பெரும் பங்கு கொண்ட இவர் பாடசாலை அபிவிருத்திக்காக புதிய காணிகளை வாங்கச் செய்து அதில் புதிய கட்டிடங்களும் விஞ்ஞான கூடம் முதலியவற்றையும் ஏற்படுத்தியுள்ளார். இவரிடம் படித்தவர்கள் பலர் இன்று நல்லநிலையிலிருக்கிருர்கள்.

— —

### மேலும் இரு கப்பல்களை இலங்கைவாங்கும்

கோட்டை, ஞாயிறு

இலங்கை சொந்தமாகக் கப்பல்களை வைத்திருப்பதற்கும் இலங்கை கப்பல் கார்ப்ரேஷனின் முதலாவது கப்பலான 'பினிமோர்வலி' அடுத்த ஜனவரியில் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என்று கப்பல் கூட்டுத்தாபனம் மேலும் இரு கப்பல்களை வாங்கி இலங்கைக் கொடியுடன் செல்வதற்கு அடுத்தமாதத்தில் சட்டம் கொண்டுவரப் போவதாகவும் கப்பல் போக்குவரத்து உல்லாசப் பிரயாண அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லை தெரிவித்துள்ளார்

— —

### பழைய மாணவர் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய்மெமோறியல் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற போது கல்லூரியிலிருந்து ஓய்வுபெறும் திருவாளர்கள் சம்பந்தன், கதிரவேலு அரிய பூசணம்ஐயர், திருமதி மேதர் ஆகியோருக்கு பிரியாவிடைவிருந்துபசாரம் அளிப்பதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

— —

அரச அதிகாரிகள்

### மது அருந்தத் தடை!

புதுடில்லி, டிசம், 13

இந்திய அரசாங்க அதிகாரிகள் மது அருந்துவதை முற்ருகத் தடைசெய்ய வேண்டுமென மதுவிலக்கு திட்டக்கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

புதுடில்லியில் திருத்தி அமைக்கப்பட்ட மதுவிலக்குத் திட்டக் கமிஷனை

தமிழ் நாடு அரசாங்கத்தின்

# மொழிக் கொள்கைக்கு சுதந்திரா கண்டனம்

சென்னை, டிச. 12

தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழகத்துடனுன சகல ஒத்துழைப்புக்களையும் விலக்கிக்கொள்வதென தமிழ்நாடு ராஜ்ய சட்டசபை சுதந்திராக்கட்சிக்குழு நேற்று முடிவுசெய்தது.

பிராந்தியப் பிரிவுமனப்பான்மை, வகுப்புவாதம், கம்யூனிசம் ஆகிய விரோத சக்திகளை எதிர்த்து நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து போராடுவதென சுதந்திராக்கட்சி முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து தி. மு. க சுதந்திரா, முஸ்லிம் லீக், ஆகியவை கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றன. ஆனுல் தி மு க மத்திய அரசில் இந்திராக் காந்தியைத் தொடர்ந்து ஆதரித்துவருவதும், அண்மையில் நடக்கவிருக்கும் முனிசிப்பல் சபைத்தேர்தல்களில் இடதுசாரிக் கட்சிகளுடனும் இந்திரா காங்கிரஸுடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிட தி மு க முடிவு செய்திருப்பதும், சுதந்திராக் கட்சி தி மு க வுடனுன தொடர்பைத் துண்டிப்பதற்குக் காரணமெனக் கருதப்படுகிறது.

அரசாங்கம் மாணவர் விடயத்தில் கைக்கொள்ளும் மொழித் திணிப்பையும் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

# "முதலாளித்துவ சக்திகளை ஒழிப்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையாகும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"கம்யூனிஸ் கட்சியின் கொள்கை தேர்தல் விஞ்ஞாபனத்திலிருக்கும் கொள்கைகள் மட்டுமல்ல இந்நாட்டின் ஏகாதிபத்திய சக்திகள், முதலாளித்துவ சக்திகள், நிலப்பிரபுத்துவ சக்திகள் பணக்கார கும்பல்களின் கொட்டம் இவற்றை பூண்டோடு ஒழிப்பதுதான் எமது கட்சியின் கொள்கையாகும்.

யாழ். மாநகரசபைமண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட கம்யூனிஸ்ட்கட்சி வாலிபர்சங்க மகாநாட்டில் திரு, பொன் குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினுர், கம்யூனிஸ்ட் வாலிபர்சங்கத் தலைவர் திரு. எஸ். சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

கடந்த தேர்தல் விஞ்ஞாபனம் பலத்த கருத்துவேற்றுமைகளுக்கு இடையே தான் உருவாகியது. ஆளுங் கட்சியைச் சேர்ந்த மூன்று கட்சிகளும் மூன்றுவித கருத்துக்களைக்கொண்டிருக்கின்றன' அப்படியிருந்தும் எம்மை ஒன்றுபடுத்திய ஒரே ஒருகருத்து மேற்கூறிய தீயசக்திகளை ஒழித்துகட்ட வேண்டும் என்பதே கூட்டாட்சிக்குள் இருக்கும்சில வலதுசாரிகளின் எதிர்ப்பு பணிகள் தேசியமயம் போன்ற திட்டங்கள்செயல்படாமல் நிற்கின்றன. இத்திட்டங்களை நிறைவேற்றும் வகையில் இந்நாட்டில் தொழிலாளி விவசாயமக்கள் ஒருமித்து நின்று போராடவேண்டும். கம்யூனிஸ்ட்கட்சியின் கொள்கைகள் நீண்டநாள் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை, யூ. என். பி. ஆட்சியை வீட்டு திரு, பண்டாரநாயக்கா வெளியேறியதற்கு எமது கட்சியின்கொள்கைப் போராட்டங்கள் ஓரளவுக்குக் காரணமாகஇருந்தன. அதன் பிரதிபலிப்புத்தான் அவரது ஆட்சி ஒரு சில முதலாளிகளின் கையில் இருந்த பஸ்கம்பனிகள் துறைமுகக் கம்பனிகள் இன்சூரன்ஸ் கம்பனிகள் பாடசாலைகளை மக்கள்கைக்கு மாற்றின. திரு, எஸ். நடராசா பேசுகையில் கூட்டாட்சி பொறுப்பேற்ற பின்தான் தொழிலாளருக்குச் சாதகமான சட்டங்கள் உருவாகி செயல்பட்டன, அரசாங்க ஊழியர்களுக்கும் கடைசிகாலத்திலே பென்ஷன் திட்டங்கள் உண்டு என்ருர்.

திரு. ஏ. வைத்திலிங்கம் பேசுகையில் "அறிவுவளர்ச்சி உடையவர்களைக் கொண்டுதான் கம்யூனிச

இந்த நத்தார் பிரகாசமுடையதாகட்டும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




நத்தாரை நினைக்க நாள் நெருங்கி விட்டது. பெருநாள் காலத்துக்குப் பொருத்தமாக வீட்டைச் சோடிக்க, எடுப்பான திரைச் சேலைகளுக்கும் சோடினைகளுக்கும் தோதான நிறங்களைத் தெரிவு செய்ய, நாள் நெருங்கி விட்டது. உங்கள் மனக்கண்ணில் காட்சியளித்த அதே வண்ணங்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். ரோபியலக் பற்றி, உலகின் நல்ல வடிவான வண்ணங்களைப் பற்றி, நினைக்கக் காலம் வந்துவிட்டது.

காலப் போக்கை அனுசரித்து நடவுங்கள். பெருநாட காலத்தின் மோகனப் பெருமகிழ்வை உருவகித்துக்காட்டும் வண்ணத்தை மற்றவர்கள் நாடுவதைப் போல நீங்களும் நாடுங்கள். உங்கள் வீடு ஜீவ களையுள்ள வண்ணப் பொலிவு பெறச் செய்யுங்கள். பரவசமுண்டாக்கும் பல்வேறு வகையான ரோபியலக் வண்ணங்களில் வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து, பண்டிகைக்காலத்தின் பூரிப்பை அப்படியே சிறைப்பிடியுங்கள். இந்த நத்தாருக்கு ரோபியலக் வண்ணங்களின் மத்தியில் இன்பம் பொங்கும் உல்லாச வாழ்க்கை பற்றி நினைக்க நாள் நெருங்கி விட்டது.

# ரோபியலக்

உலகின் நல்ல வடிவான நிறங்கள்

பெயின்டுகளில்




சிலோன் பெயின்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்

GRANT-18


காரிகள் மது அருந்துவதை முற்ருகத் தடைசெய்ய வேண்டுமென மதுவிலக்கு திட்டக்கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

புதுடில்லியில் திருத்தி அமைக்கப்பட்ட மதுவிலக்குத் திட்டக் கமிஷனை சேர்ந்த திரு. ஹனுமந்தையா மதுவிலக்குபற்றி விளக்கும்போது. தெரிவித்ததாவது:

''மக்களுடன் தொடர்புடைய அதிகாரிகள் மக்களுக்கு வழிகாட்டக்கூடியவாறு தாமே மது அருந்துவதை முற்ருகத் தடை செய்ய வேண்டும் மக்களுக்கு தங்களை எடுத்துக் காட்டாகக் கொள்ளக்கூடியவாறு அவர்தம் வாழ்க்கை அமையவேண்டும்.''

— —

தென்அமெரிக்காவில்

## மலைச்சரிவினுல் 100 பேர் பலி

நியுயோர்க், டிச. 13

தென் அமெரிக்காவிலுள்ள வடகொலம்பியாவில் ஏற்பட்ட பனிப் புயலினுலும் மலைச்சரிவினுலும் 100 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. மலைகளில் மண் சரிவுகள் ஏற்பட்டன. நதிகள் பெருக்கெடுத்து ஓடின. ஒரு பிரதேசத்தில் 40 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. பல பகுதிகளில் அபாய நிலை இருந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— —

## திருநாள்

பண்டத்தரிப்பு ஞாயிறு

மாதகல் புனித தோமஸ் திருநாளுக்கு ஆயத்தமாக ஆராதனைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன திருநாள் இம்மாதம் 21-ம் திகதி திருநாட் பூஜையுடனும் திருச்சொரூபசுற்றுப் பிரகாரத்துடனும் நடைபெற்று முடிவடையும்ஆராதனைகளைக் கட்டளைக்குரவர் வண. ஜோசவ் நடாத்திவருகிருர்.

— —

## சென்னை கருத்தரங்கில் இலங்கை அறிஞர்

கோட்டை, ஞாயிறு

இன்று சென்னையில் ஆரம்பமாகும்'பாடசாலைசிறுவர்' கருத்தரங்கில் இலங்கையிலிருந்து பேராசிரியர் ஜே. ஈ. ஜெயசூரியா, பேராசிரியர். திருமதி எம்.எம். வீரசிங்கம் திருமதி எல். என். பெர்னுன்டோ ஆகிய மூவரும் கலந்து கொள்வர் இக்கருத்தரங்கு நான்கு நாட்கள் நடைபெறும்.

கள் சம்பந்தன், கதிரவேலு அரிய பூசனம்ஐயர், திருமதி மேதர் ஆகியோருக்கு பிரியாவிடைவிருந்துபசாரம் அளிப்பதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

— —

## பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு

மாவிட்டபுரம், ஞாயிறு

பொதுமக்கள்-பொலிசார் நல்லுறவை ஏற்படுத்த தீவிர முயற்சிகளை சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். நவரத்தினராசா மேற்கொண்டுள்ளார்.

இவர் கிராமந்தோறும் கூட்டங்களை நடத்தி பொதுமக்களிடம் இருந்து பொலிசார் எத்தகைய நல்லுறவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிருர்கள் என்பதனையும் பொலிசாரினது கடமைகளையும் எடுத்துக் கூறிவருகிருர்.

— —

## சுழிபுரம் கி.ச.வரவுசெலவு திட்டம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபையின் அடுத்தஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. வருமானம் ரூபா 1,11,155-12 சதம் செலவு ரூபா 113356-18 சதம். மேலதிகமான துண்டுவிழும் தொகை ரூபா 2,201-06 சதம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வரவு செலவுஅறிக்கை நுணுக்கமாக பரிசீலனை செய்யப்பட்டது.

— —

## 6 மணித்தியாலம் காத்திருந்தனர்

கடுகண்ணவ, ஞாயிறு

கடந்த வெள்ளிக்கிழமை கண்டி தர்மராஜா கல்லூரி சென்ரரில் ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சை எழுதியமாணவர்கள் பரீட்சைக் கேள்வித்தாளுக்காக ஆறுமாணித்தியாலம் காத்திருந்தனர்.

மேற்படி பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்கு காலை எட்டுமணிக்கே வந்துவிட்டனர், பரீட்சை மேற்பார்வையாளர் கேள்வித்தாள்கள் இன்னும்வந்துசேரவில்லை எனத் தெரிவித்ததும் அவர்கள் ஆறுமணித்தியாலங்கள் காத்திருந்து பின்னர், பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் பரீட்சை நடைபெற்றது.

துக்களைக்கொண்டிருக்கின்றன' அப்படியிருந்தும் எம்மை ஒன்றுபடுத்திய ஒரே ஒருகருத்து மேற்கூறிய தீயசக்திகளை ஒழித்துகட்ட வேண்டும் என்பதே கூட்டாட்சிக்குள் இருக்கும்சில வலதுசாரிகளின் எதிர்ப்பினுலே தோட்டங்கள் தேசியமயம், வங்கிகள் தேசியமயம் ஏஜென்சி கம்

அரசாங்க ஊழியர்களுக்கும் கடைசிகாலத்திலே பென்ஷன் திட்டங்கள் உண்டு என்ருர்.

திரு. ஏ. வைத்திலிங்கம் பேசுகையில் ''அறிவுவளர்ச்சி உடையவர்களைக் கொண்டுதான் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம்'' என்ருர்.

# '1956-ல் தான் இலங்கையில் இரும்புத்திரை அகன்றது'

— வி. தர்மலிங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

'சோஷலிச நாடுகளில் இரும்புத்திரை இருந்தது என்று கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் நமது நாட்டில் கூறிவந்தார்கள். ஆனல் 56-ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில்தான் இரும்புத்திரை இருந்தது. 56-ம் ஆண்டில்தான் இலங்கையின் இரும்புத்திரை நீங்கியது'

இவ்வாறு உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் 21-வது ஆண்டு விழாவையொட்டி தூதுவர் கலாநிதி வவுல் வெற்றருக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பில் கலந்துரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு முன்னுள் யாழ். நகர மேயர் திரு. சி. நாகராஜா தலைமைவகித்தார்

திரு. வி. தர்மலிங்கம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

1956 ம் ஆண்டுக்குபின்னர்தான் சோஷலிச நாடுகள் பொருளாதாரத்திலும் ஏனைய துறைகளிலும் தீவிர முன்னேற்றமடைந்தது.

இரண்டாவது உலகமா யுத்தத்தின் பின்னர் பிரிக்கப்பட்ட கிழக்கு ஜெர்மனி முன்னுளில் விவசாயப் பிராந்தியமாகவே இருந்தது. இன்றைக்கு கைத்தொழில் துறையில் ஐரோப்பாவில் 5-வது இடத்தைப் பெற்றுள்ளது. மேற்கு ஜெர்மனிக்குக் கிடைக்கின்ற அந்நிய நாட்டு உதவிகள்எதுவும் கிழக்கு ஜெர்மனிக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் அது வெகு தீவிரமாக முன்னேறிவந்துள்ளது. ரஷ்யாவுக்கு அது சுயமாக முன்னேறி நஷ்டஈடும் கொடுத்திருக்கிறது.

திருவாளர்கள் வி. பொன்னம்பலம், நியமன எம். பி, எம். ஸி. சுப்பிரமணியம், ஏ வைத்திலிங்கம், எஸ் விஜயானந்தன் ஆகியோரும் பேசினர்.

## ஸ.க.'வெற்றி

சாய்ந்தமருது, ஞாயிறு

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிகமதுல். வீரகொடை கிராமசபையின் 9 வட்டாரங்களுக்குமான தேர்தல் அண்மையில் நடைபெற்ற போது 7 வட்டாரங்களில் சுதந்திரக்கட்சியும் மற்றும் இரு வட்டாரங்களில் ஒன்றில் சுயேச்சையும், மற்ருென்றில் ஐ தே கட்சியும் வெற்றிபெற்றுள்ளது.

3ம் வட்டாரத்தில் சுயேச்சை வேட்பாளர் திரு ஏ. சுப்பிரமணியம் வெற்றி பெற்ருர்

## ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

சாய்ந்தமருது, ஞாயிறு

பெரிய நீலாவணையைச் சேர்ந்த திரு உமையர் சோமநாதர் கடந்த நவம்பர் 31-ந் திகதியிலிருந்து தமது 35 வருடகால ஆசிரிய சேவையின்பின் ஒய்வு பெற்ருர். இவர் கல்முனை வட்டார ஆசிரியர் சங்கத்தின் தனதிகாரியாகவும்கடமையாற்றியுள்ளார்.

பெரிய நீலாவணை வடக்கு அ த க பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு நா சங்கரப்பிள்ளை தமது 35வருடகால சேவையின்பின் கடந்த மாதத்துடன் ஒய்வுபெற்ருர்

கல்லாற்றைச் சேர்ந்த இவர் கிராமமுன்னேற்றச் சங்கங்கள், சனசமூகநிலையங்களின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்

— —

## 430 மக்கள் வங்கி கிளைகள்

கோட்டை, ஞாயிறு

1971-ம் ஆண்டு மார்ச் மாதத்துக்கிடையில்நாடெங்கும் மக்கள் வங்கிக்கிளை நிறுவப்படவிருக்கின்றன.

430க்கும் மேலான மக்கள் வங்கிக்கிளைகள் நிறுவப்படவுள்ளன. தற்போது நாட்டின் பல பாகங்களிலும் 90 மக்கள் வங்கிக் கிளைகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

செல்வம் அழிவு உள்ளது; ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது. கல்வி அழிவில்லாதது. ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது. — நாவலர்.

ஈழநாடு
Eelanadu Madona Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 29-ந் திகதி (14-12-70)

## ஆசிரிய சேவைக் கமிஷன்

பூரண அதிகாரமுள்ள ஆசிரியர் சேவைக்கமிஷன் ஒன்று அடுத்த வருட முற்பகுதியில் நியமிக்கப்படுமென்றும் இதற்கான மசோதாவொன்றை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் விரைவில் கொண்டுவருவாரென்றும் ஒரு செய்தி கூறுகிறது. ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையொன்று நிறைவேறப்போகிறதென்பதையிட்டு ஆசிரிய உலகம் நிச்சயம் மகிழ்ச்சியடைய இடமுண்டு.

ஆசிரிய நியமனம், பதவி உயர்வு ஆகியவைகளை விட கல்வி அமைச்சுக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் தொல்லையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி வந்திருப்பது ஆசிரிய இடமாற்றப் பிரச்னைதான்.

இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் சுமுகமான வழி காண்பதற்கு அரசாங்க சேவைக் கமிஷன், ஸ்தல ஸ்தாபன சேவைக்கமிஷன் ஆகியவை இருப்பனபோன்று ஆசிரிய சேவைக் கமிஷன் ஒன்றும் இருக்க வேண்டுமென்பது ஆசிரிய சங்கங்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். இக்கோரிக்கையை நிறைவேற்றமுன் வந்த கல்வி அமைச்சர் பாராட்டுக்குரியவர்.

## தமிழ் மகள் மறைவு

திருமதி மா. மங்களம்மாள் உயிர் நீத்தார் என்ற செய்தி கேட்டு "என் மகளே நீ போய் விட்டாயோ" என்று தமிழ்த் தாய் கண்ணீர் வடிப்பாள்.

சமூக சேவை செய்ய விரும்புவோர் பலர், அதற்கெனப் புறப்படுவோர் இன்னும் பலர். போதும் நமக்கு இந்த வேலை என்று ஒதுங்கி விடுவோர் பலர். "சமூக சேவைக்குப் புறப்பட்டு விட்டோம்" என்று பறை சாற்றி ஆடம்பரமாக உலகனைத்தும் தெரிய வைத்து முன் வருவோர் சிலர். ஆனால் அடக்கமாக மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை யென்று பணி புரிபவர் மிக மிகச் சிலர். இந்த வகையில் சேர்ந்தவர் தான் மறைந்த மங்களம்மாள்.

இந்தக் காலத்தில் அரசியல் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் சில சிறுமிகளைப் பிடித்து வந்து மேடையில் நிறுத்தி சொல்லி வைத்ததைச் சரியாகச் சொல்லும்படி சிலர் செய்கிறார்கள் இது வல்ல சமூக சேவையென்பதற்கு திருமதி மங்களம்மாள் உதாரணம்...

...டில் தமிழ் மகளிர் கழகத்தை ஆரம்பித்தார். இந்தக் காலத்தில் பெண்களின் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

அம்மையாரின் உன்னத பணியை உணர்ந்து கொண்ட தாய்க்குலத்துக்கு என்றுமே தனி மதிப்பளித்து வரும் தமிழ்ச் சமுதாயம் தென்னிந்தியாவிலுள்ள கோவில்பட்டி என்ற இடத்தில் நடந்த மகளிர் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் பெருமையை அவருக்கு அளித்தது. இந்த மகாநாட்டின் பின்னர் அவர் ஆரம்பித்த "தமிழ் மகள்" என்ற சஞ்சிகை இன்னும் வெளிவந்து கொண்டிருக்கிறது. தமிழ்மகளின் சிறப்புக்காக, உயர்வுக்காக அந்த அம்மையார் கடைசி வரை உழைத்துவந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமது மனதைப் பறி கொடுத்த திருமதி மங்களம்மாள் 1931-ம் ஆண்டில் இங்கு மகளிர் தேசிய சேவை முன்னணியொன்றை ஆரம்பித்தார். இந்தியாவின் இன்றைய பிரதமரான திருமதி...

# இலங்கை சமஷ்டிக் குடியரசின் மாதிரி அரசியல் அமைப்புத்திட்டம்

**அரசியலமைப்பு அமைச்சிடம் இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக்கட்சி சமர்ப்பித்துள்ள நகல் திட்டத்தின் முதல் பகுதி நேற்று வெளிவந்தது. இதன் இரண்டாம் பகுதி இன்று வெளியாகிறது.**

### முக்கிய ஏற்பாடுகள் இலங்கை சமஷ்டிக் குடியரசின் மாதிரி அரசியலமைப்புத் திட்டம்

### முன்னீடு

இலங்கை மக்களாகிய நாம், ஒரு சோஷலிஸ ஜனநாயக நாட்டின் குறிக்கோள்களை உறுதிப்படுத்தும் ஒரு சுயாதீனமான, இறைமையுள்ள, சுதந்திரக் குடியரசாக இலங்கையை அமைக்கப் பயபக்தியுடன் தீர்மானித்து, அத்துடன், எல்லா இனவாரியான, மொழிவாரியான மதவாரியான குழுவினரும், அவர்களுடைய முன்னாள் இந்நாள் நிலை எவ்வாறாயினும், அவர்களுடைய வலிமையும் பலவீனமும் எவ்வாறாயினும், எமது சமுதாயத்தின் பொருளியல், சமூகவியல், அரசியல், பண்பாட்டியல் வாழ்வில் எல்லாத்துறைகளிலும் சமவுரிமைகளைத் துய்க்கின்றனர் என்ற நிலைக்களனின்றும் தலைப்பட்டு, மக்கள் மத்தியில் நட்புறவு, சகோதரத்துவப் பிணைப்புகளைப் பலப்படுத்தி, எமது நாட்டு மக்களின் ஐக்கியத்தையும், வலிமையையும், மாண்பையும் பேணி வளர்ப்பதுடன், இலங்கைச் சமஷ்டிக் குடியரசில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதுமான நோக்கத்துடன், எமது அரசியலமைப்பு நிர்ணய சபையில் இவ்வரசியலமைப்பை இத்தால் ஏற்று, நிறைவேற்றி, எமக்கு அளிக்கிறோம்.

### பகுதி 1

### அரசியற் கட்டமைப்பு

1. இலங்கைச் சமஷ்டிக் குடியரசானது:

(அ) குடியரசின் தெற்கு, மேற்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(ஆ) குடியரசின் வடமத்திய, வடமேல் பிரதேசங்களைக்கொண்ட மாநிலம்.

(இ) குடியரசின் மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(ஈ) குடியரசின் வட, வட...

(ஊ) (குடியரசின் தலைநகரமென்ற முறையில் மத்திய அரசினால் நிருவகிக்கப்படுவனவாகிய) கொழும்பு மாநகரமும் அதன் சுற்றுப்புறங்களும் என்பனவற்றைக் கொண்டிருக்கும்.

2. ஓர் எல்லை வகுக்கும் ஆணைக்குழுவானது இம்மாநிலங்களினதும் கொழும்பு மாநகரத்தினதும் அதன் சுற்றுப்புறத்தினதும் எல்லைகளை வகுத்தல்வேண்டும். எல்லைகளை வகுப்பதில், ஆணைக்குழுவானது, பழைய வரலாற்றுப் பாரம்பரியங்கள், பூகோள, பண்பாட்டு, மொழிவாரி, சமூகச்சூழல்கள், குடிசனத்தேக்கம் என்பனவற்றுடன் அத்தகைய வேறு காரணக்கூறுகளையும் கருத்திற்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

3. மாநில அரசுகளானவை, அவையிடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமது பிரதேசங்களை நிருவகிப்பதில் பூரண அதிகாரமுடையதாதல்வேண்டும்.

4. மாநில அரசுகளின் சட்டமியற்றும் அதிகாரம் மாநில ஆட்சிமன்றங்களுக்கு உரித்தாக்கப்படல்வேண்டும். இம்மன்றங்கள், இவ்வரசியலமைப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஒவ்வொரு மாநிலத்தினதும்பிரதேச எல்லைகளுக்குள் செயற்படத்தக்க சட்டங்களை ஆக்க அதிகாரமுடைத்தாதல் வேண்டும்.

5 மாநிலங்களின் அரசியலமைப்புகளானவை, வேறு விடயங்களுடன், குடிசனத்தொகையும் நிலப்பரப்பும் இணைத்துக் கணிக்கப்பெற்ற அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவோர் ஆட்சிமன்றத்தையும்கொண்டிருக்க ஏற்படுத்துதல் வேண்டும்.

6 ஒவ்வொரு பொதுத்...

...கப் பகுத்துக்கொள்வதுடன், ஒவ்வொரு குழுவும் ஒரு தலைவரைத் தெரிவு செய்தலும் வேண்டும்

7. மாநில அரசுகளின் நிறைவேற்றுப்பணிகள் தலைவடுக்கும் மேற்கூறப்பட்ட குழுக்களுக்கும் உரியன.

8 பரஸ்பர நலன்பயக்கும் கருமங்கள் தொடர்பில் மாநில அரசுகளானவை தமக்குள் உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம். ஆயினும், அத்தகைய உடன்படிக்கைகளை அவை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதுடன், அவ்வுடன்படிக்கைகள் குடியரசினது உரிமைகளுக்கும் நலன்களுக்கும் அல்லது மற்றைய மாநிலங்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் முரண்பட்ட எதனையும் உள்ளடக்கியிருப்பின், மத்திய அரசாங்கம் அவற்றை நிறைவேற்றலைத் தடுப்பதற்கு உரித்துடையது.

9. மத்திய அரசாங்கத்தின்முகவராண்மைக்கூடாகவன்றி மாநில அரசுகளுக்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்துக்குமிடையில் அல்லது அதன் பிரதிநிதிகளுக்குமிடையில் எதுவித தொடர்பும் இருத்தலாகாது.

10. மாநிலங்களுக்கிடையிலான எல்லாப் பிணக்குகளும் நடுத்தீர்ப்புக்கெனவும் தீர்வைக்கெனவும் மத்திய அரசாங்கத்திற்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டும். இப்பிணக்குகளில் மத்தியஅரசாங்கத்தின் விதிப்பு முற்றானதாக வேண்டும். எந்தவொரு மாநிலவரசும் வேறெந்த மாநில அரசுக்கெதிராகவும் ஒருதலைச்சார்பான நடவடிக்கை எதனையும் எடுத்தல் ஆகாது.

11. மாநில அரசுகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையிலான எல்லாப்...

...ஆற்றுப்படுத்தப்படல்வேண்டும்.

12. மாநிலங்களானவை தம் அதிகாரத்தை முழுமையாகப் பிரயோகிப்பதற்கு, குடியரசு, அவைக்கு எல்லா உதவிகளையும் அளித்தல் வேண்டும்.

13. சட்டப்படி தமக்கான கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் தவறுகின்ற மாநில அரசுகளுக்கெதிராக மத்திய அரசாங்கமானது ஏற்றநடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

14. இலங்கைக் குடியரசின் நிலப்பரப்பு பிரிக்கமுடியாததும் மாநிலங்களின் நிலப்பரப்பை உள்ளடக்கியதுமாகும்.

15. பதினாறும் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர்ந்தஏனைய எல்லா விடயங்களிலும் ஒவ்வொரு மாநில அரசும் முழு அதிகாரத்தைப் பிரயோகிக்க உரிமையுடையது.

16. அரசாண்மையுடைய அதன் உயர்ந்த உறுப்புக்களாலும் அரசாங்க அமைப்புக்களாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவாறான இலங்கைக்குடியரசின் நியாயாதிக்கமானது பின்வருவனவற்றை மேவியதாகும்.-

[i] சர்வதேசத்தொடர்பில்குடியரசைப் பிரதிநிதித்துவப்படுத்தலும், வெளிநாட்டு அரசுகளுடனும்சர்வதேச நிறுவனங்களுடனும் உடன்படிக்கைகளை முடித்தலும் உறுதியாக்கலும்;

[ii] போரும் சமாதானமும் பற்றிய பிரச்னைகள்;

[iii] குடியரசின் காப்பரண்களை அமைத்தலும், குடியரசினைப் பாதுகாக்கின்ற எல்லா ஆயுதப்படைகளையும் வணித்தலும்;

[iv] குடியரசின் நிலப்பரப்பில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்;

...கின்ற பிரஜையல்லாதோர் வெளிநாட்டார் என்போரின் உரிமைகள் தொடர்பிலான சட்டங்களும்;

[vii] குடிவரவும் குடியகல்வும் பற்றிய நிர்வாகம்;

[viii] சுங்கம், இறக்குமதி ஏற்றுமதி, முத்திரைகள், மரணச்சொத்துவரி இவைகளை நிருவகித்தல்;

[ix] பொதுக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, உயர்கல்வித்துறைகளில் அடிப்படைக்கொள்கைகளை வகுத்தல். தொழில் நுட்ப, தொழிற்றுறை உயர்கல்விக்கெனச் சிங்கள, தமிழ்ப்பிரிவுகளைக்கொண்ட தேசியத்தன்மையுள்ள பல்கலைக்கழகங்களை நிறுவுதல். மாநில அரசுகளும் அரசுக்குட்பட்ட பல்கலைக்கழகங்களை நிறுவும் அதிகாரமுடைத்தாதல் வேண்டும்

(x) தொழிற் சட்டத்துக்கான அடிப்படைக்கொள்கைகளை வகுத்தல்.

[xi] பொதுநல சுகாதாரத்துறை தொடர்பில்அடிப்படைக்கொள்கைகளை வகுத்தல்.

(xii) கூட்டுறவு கூட்டாக்கத் துறைகளில் அடிப்படைக்கொள்கைகளை வகுத்தல்.

(xiii) குடியரசிலிருந்தும், மாநில அரசுகளிலொவ்வொன்றிலிருந்தும் பெறப்பட்ட உறுப்பினர்களையும் ஜனாதிபதியினால் காலத்திற்குக்காலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும்கொண்ட நிதி ஆணைக்குழுவொன்றின் பரிவுரையின்பேரில் மாநிலங்களுக்கு இறைவரி, வருவாய், மூல வளங்கள் என்பனவற்றை பங்கீடுசெய்தல்; நிதிஆணைக்குழுவின் அறிக்கையையும் ஏனைய நடைமுறைகளையும் எதிர்நோக்கி மானியம்எதையும் முன்னதாகவே வழங்குவதற்கான தத்துவம், மாநிலங்களினால் விதிக்கப்பட்ட வரிகளை அங்கீகரிக்கும் தத்துவம்.

[xiv] நாணயமுறை, கடன்முறை என்பனவற்றை நெறிப்படுத்தல்;

[xv] குடியரசுக்குள் கடன் எடுக்க மாநில அரசுகளுக்குள்ள உரிமைகளுக்குப்பங்க...

[xvi] நாடு முழுவதற்குமான அடிப்படையில் வங்கிகளையும். கைத்தொழில். தோட்டத்தொழில். கமத்தொழில், வணிகத்தொழில் என்பனவான முயற்சிகளையும் நிறுவுதலும் நிருவகித்தலும்;

[xvii] தபால் தந்தி தொடர்புச்சேவைகளை நிருவகித்தல்;

[xviii] நீராக்க சக்தி, ஆறுகள், இயற்கை வளங்கள் என்பனவற்றின் மீதான ஆதிக்கமும் அவற்றைப் பயன்படுத்தலும்;

[xix] துறைமுகங்கள், விமானநிலையங்கள், கடற்போக்குவரத்து. விமானப்போக்குவரத்து, புகைவண்டிப் போக்குவரத்து இவற்றை நிருவகித்தல்;

[xx] மாநில அரசுகளின் ஆலோசனையுடன் நிலமட்டத்து, சுரங்கத்து நீரைக் கெடாவண்ணமும், பாழாகிவிடாவண்ணமும் பாதுகாக்கச் சட்டமாக்கல்;

(xxi) நீர்வாய் மின்சக்தியை உண்டாக்கலும், பாய்ச்சுதலும்;

(xxii) மாநிலங்களிடையே செறிந்த வீதிகளையும், மூல வீதிகளையும் அமைத்தலும் பேணலும்;

(xxiii) பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்தலும் பேணலும்;

(xxiv) வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் தேசிய முக்கியத்துவமுள்ள நினைவுச் சின்னங்களையும் கொள்ளலும், பேணுதலும், பாதுகாத்தலும்;

(xxv) வெடிப்பொருட்கள் ஆயுதங்கள், வெடிமருந்து இவற்றை ஆக்கலும் விற்றலும்;

(xxvi) விலங்குகள், கடல்வாழ் தாவர உயிரினங்கள் என்பனவற்றைப் பாதுகாப்பதற்குச் சட்டமாக்கல்;

(xxvii) ஒத்தமுறையிலானவொரு பொருளியற்றுறை, சமூகவியற்றுறைப் புள்ளிவிபரங்களை உருவாக்கலும், நிருவகித்தலும்;

(xxviii) நிறைகளையும் அளவுகளையும் துணிதல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமிகளைப் பிடித்து வந்து மேடையில் நிறுத்தி சொல்லி வைத்ததைச் சரியாகச் சொல்லும்படி சிலர் செய்கிறார்கள் இது வல்ல சமூக சேவையென் பதற்கு திருமதி மங்களம் மாள் உதாரணம்.

யாருடைய தூண்டுத லும் நிர்ப்பந்தமும் இல்லாமல் மக்களுக்கு குறிப்பாக மகளிருக்கு அவர்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்த்தவேண்டுமென்ற உண்மையான சேவை மனப்பான்மையுடன் தாமாகவே பணியாற்ற முன்வந்தவர் இந்த அம்மையார்.

1902-ம் ஆண்டில் சமூக இயக்கம் ஒன்றை உரு வாக்கிய திருமதி மங் களம்மாள் 1923-ம் ஆண் திருமதி மங்களம்மாள் 1931-ம் ஆண்டில் இங்கு மகளிர் தேசிய சேவை முன்னணியையொன்றை ஆரம்பித்தார். இந்தியா வின் இன்றைய பிரதமரான திருமதி இந்திராகாந்தியும்அவரது தந்தையாரான ஆசிய ஜோதியும் இலங்கை வந்தபோது திருமதி மங்களம்மாள் வரவேற்று இங்கும் சுதந்திர வேட் கையை ஊட்டுவதற்கு குறிப்பாக மகளிர் மத்தி யில் ஊட்டுவதற்கு காரணமாக இருந்தார்.

திருமதி மங்களம்மாள் மறைந்தாலும் அவர் சமூகசேவைக்கு காட்டிய வழி தமிழ் மகளிருக்கும் தமிழ்மக்களுக்கும்என்றும் நிலைநின்று துணைசெய்யு மாக!

## கூட்டுறவு ஊழியர்க்கு தனிக் கமிஷன்

கோட்டை, ஞாயிறு

நாடுமுழுவதிலும் கூட்டு றவு ஸ்தாபனங்களில் பணி யாற்றும் சேவையாளர்கள் அனைவரையும் ஒருங்கிணை த்து ஒருகமிஷனின் கீழ் கொண்டுவருவதற்கு உள் நாட்டுவெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு.ரி.பி. இலங் கரத்னமுடிவு செய்திருக் கின்றார்.

கூட்டுறவுஸ்தாபனங்களில் தொழில்புரியும் ஊழியர்கள் அனைவரையும் பரிபாலிக் கும் அதிகாரம் கொண்ட தாக இந்தக் கமிஷன் இயங் கும்.

அரசாங்கஊழியர் சேவை கமிஷன் உள்ளூராட்சி சேவைக் கமிஷன் ஆகியவை போன்று இந்தக் கமிஷனும்இயங்கும்.

கூட்டுறவுஇயக்கங்கள் சம் பந்தமான விசாரணைக்குழு வின் அறிக்கை கிடைத்தவு டனேயே கூட்டுறவு ஸ்தாப னங்களில் அபிவிருத்திகள் செய்வதற்கான முய ற்சிஎடுக்கப்படும் என்றும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் சம்பந்தமான ஆலோசனைச் சபையொன்று நிறுவப்படும் என்றும் தெரிய வருகின் றது.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் திருத்தியமைக்கும் திட்டத் தின் கீழ் ஊழியர்களுக்கு மேலும் உரிமைகள் வழங்கு வதுபற்றியும் நிரந்தரமற்ற வர்களை நிரந்தர மாக்குவது பற்றியும் முடிவுகள் எடுக் கப்படும்.

இதன் மூலம் நாடு முழுவ திலும் கூட்டுறவுஸ்தாபனங் களில் தொழில்புரியும் நிரந் தர, தற்காலிக ஊழியர்கள் சுமார் 30,000 பேர்நன்மை யடைவார்கள்.

## நீர்வேலி பண்டகசாலைக்கு மின்னொளி

யாழ்ப்பாணம், திங்கள்

"திருக்கார்த்திகை ஒளித் தினத்தில் ஐக்கிய பண்டக சாலை அங்கத்தவர் எல்லோ ரது நல்லாசியுடன் இன்று மின் ஒளியை எமது ஐக்கிய பண்டகசாலை பெறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன் ஒத்துழைப்பு மூலம் பல ஆக்கபூர்வமான வற்றைச் சங்கம் மேன்மேலும் செய்ய வேண்டிப்பிரார்த்திக்கின் றேன்."

இவ்வாறு நீர்வேலிதெற்கு ஐக்கியபண்டகசாலைத் தலை வர் திரு. வே. ஐயாத்துரை மேற்படி சங்கத்தின் மின் ஒளியேற்று அங்குரார்ப்பண வைபவத்திற்கு தலைமை வகித்துப்பேசுகையில் கூறி னார்.

நீர்வேலி கிராமச் சபைத் தலைவர் திரு. எஸ் அப்பாத் துரை குத்துவிளக்கேற்றி வைத்தார்.

பலகாலம் ஐக்கியபண்டக சாலையின் பொருளாள ராகக்கடமையாற்றிய திரு. ரி. தில்லையம்பலம் மின் விளக்கை ஏற்றிவைத்தார். ஆசிரியர் க இராசதுரைஉட் படப் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். தேநீர் விருந்தும் நடைபெற் றது. (கு. வி ம)

(ஆ) குடியரசின் வடமத் திய, வடமேல் பிரதேசங் களைக்கொண்ட மாநிலம்.

(இ) குடியரசின் மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(ஈ) குடியரசின் வட, வட கிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(உ) குடியரசின் தென் கிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

இத்துக் கணிக்கப்பெற்ற அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவோர் ஆட்சிமன்றத்தையும்கொண் டிருக்க ஏற்பாடுடையதாதல் வேண்டும்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலையும் அடுத்துவரும் தமது முதலாவது கூட்டத் தில் ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சிமன்ற உறுப்பினர்க ளும், தம்மைக் குழுக்களா வேறெந்த மாநில அரசுக் கெதிராகவும் ஒருதலைச்சார் பான நடவடிக்கை எதனை யும் எடுத்தல் ஆகாது.

11. மாநில அரசுகளுக் கும் மத்திய அரசாங்கத் திற்குமிடையிலான எல்லாப் பிணக்குகளும்நீதித்தீர்வைக் கென அரசியலமைப்பின்கீழ் சமைக்கப்பட்ட அரசிய லமைப்பு நீதிமன்றத்திற்கு

பரங்களை அமைத்தலும். குடியரசினைப் பாதுகாக் கின்ற எல்லா ஆயுதப்படை களையும்பணித்தலும்;

[iv] குடியரசின் நிலப் பரப்பில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்;

[v] பொலிஸ்படையை பேணலும் பணித்தலும்;

[vi] குடியுரிமைச்சட்டங் களும், இந்நாட்டில் வதி

...லும். துவம்.

[xiv] நாணய முறை, கடன்முறை என்பனவற்றை நெறிப்படுத்தல்;

[xv] குடியரசுக்குள்கடன் எடுக்க மாநில அரசுகளுக் குள்ள உரிமைகளுக்குப்பங்க மிழையாதவாறு, கடனெ டுத்தலும் கடன்கொடுத்த லும்;

... சமூகவியற்றுறைப் புள்ளி விபரங்களை உருவாக்கலும், நிருவகித்தலும்;

(xxviii) நிறைகளையும் அளவுகளையும் துணிதல்;

(xxix) மாநில அரசுகளு டன் உடன்பாடுள்ள வேறே தேனும் விடயங்கள்,

(தொடரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரையாளர் கலாநிதி கா. சிவத்தம்பி கூறியதா வது: பல நூற்றுண்டுகள் குடியேற்ற ஆட்சியின் கீழிருந்தநாடுகள் சோஷலி சம் நோக்கிமுன்னேறலாம் அந்நிய செல்வாக்கு உள்ள நாடுகள்சோஷலிசம்நோக்கி முன்னேறலாம். சுரண்டலை எதிர்த்து உண்மையான லட்சியத்தைப் பெற முயற் சிக்கும் நாடுகள், பூரண முத லாளித்துவத்திலிருந்து விடு பட முயற்சிக்கும் நாடுகள் சோஸலிசத்தை நோக்கி முன்னேறலாம். இவ்வாறு பல்வேறு வழிகளில் சோஷ லிசத்தை நோக்கிச்செல் லும் பண்பு, தவிர்க்கமுடி யாத வரலாற்று இயல்பினு லானது. இன்று நாட்டில் உள்ள கல்வி முற்றிலும் சோஷலிசத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய கல்வியல்ல சமதர்ம நாடாக இல்லாத சூழ்நிலையில் கல் வித்திட்டத்தை வகுப்பது எவ்வாறு ஒவ்வொரு கால மும் சிந்தனைகள் ஆளும் வர்க்கத்தின் கருத்தை பிரதி பலிப்பதாகவே இருக்கும் ஆளுகின்ற சக்தி இல்லாத போது எப்படிபலமான திட் டத்தை வரவேற்கமுடியும் இந்தமுரண்பாடு முக்கிய மானது.

கல்வி மனிதனுக்கு சமு தாயநிலையில் தருவதென்ன? தொழில்தான் படிப்பதன் மூலம் சமூகப்பொறுப்பு ஒப் படைக்கப்படுகிறது. எங்கள் சமுதாயத்தில் அந்தஸ்தை உயர்ந்த கல்வி பயன்படுகி றது. சாதிசமய பிரச்னைகள் உள்ள இடங்களில்கூடகல்வி இருக்குமானால் முக்கியமளிக் கப்படுகிறது. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு கிராமத்தில் தகப் பனை சாதி குறைந்தவர் என கருதுபவர் பட்டணத்தில் உயர்ந்த தவியில் இருக்கும் மகனுக்கு மரியாதைகொடுக் கிறார். இன்றைய கல்வி முறைவர்க்கப் பண்பை ஏற் படுத்தக்காலாக அமைந்தி ருக்கிறது. இதை தகர்க்கா விடில் முன்னேற முடியாது.

## தனியார் பாடசாலை. . .

### இருவகைதொழில்

மார்க்ஸிஸ தத்துவம்படி தொழில் இருவிதமாக கரு தப்படுகிறது ஒன்று அறி வாற்றலால்பெறும்தொழில் மற்றது உடலாற்றலால் பெறும்தொழில். அறிவாற் றல்தொழிலை உயர்ந்ததாக வும்உடலாற்றல் தொழிலை குறைந்ததாகவும் கருதும் மனப்பான்மையை காண்கிறோம் அறிவாற்றல் உள்ளவன்பெரியவன் என்ற கருத்துஇருக்கும்வரை அந் தக்கல்வி அமைப்புமக்களுக்கு வர்க்கவேறுபாட்டை கொண்டுவரும் தொழிலில் வேறுபாடு இல்லாத கல்வி அமையவேண்டும். கல்வி மாற்றம் மட்டுமன்றிகலாச் சார மாற்றமும் ஏற்பட வேண்டும் பழைய கலாச் சார அமைப்புவேறுபுதிய சூழ்நிலையில் எப்படிஇதனை மாற்றலாம், பழைய நிலையி லிருந்து விடுபடாத கல்வியை புதிய நிலைக்கு போகும் கல்வியை எப்படி உருவாக்க வேண்டும் என் பதை ஆராய வேண்டும். பழைய நிலைமையை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை அறியவேண்டும்.

எங்களுக்கு ஒரு மோட் சம் உண்டு அதுதான் கடைசிக்கட்டம் சோஷலி சம் அந்த வளர்ச்சி நோக்கி செல்கின்ற ஒருபடி எங்கோ செல்கின்ற பயணத்திற்கு உதவியாக அமைகிறது வாழ்க்கை இந்த வாழ்க்கை திட்ட அமைப்புக்குள் கல்வி சேர்ந்துள்ளது முதியோர் கல்வி அவசியம் கல்விபரந்த கல்வியாக அமையவேண்டும்

கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய விரிவுரையாளர் கலாநிதி கைலாசபதி கூறிய தாவது: இன்றைய உலகில் பின் தங்கிய நாட்டில் நல்ல நிவாரணமாக சோஷலிச த்தை கருதுவதுண்டு கலை, இலக்கிய கலாச்சாரகல்வித் தத்துவமாகசோஷலிசத்தை பலகாலம்கூறிவந்துள்ளனர்.

### கல்வி முறை

பின்தங்கிய நாடுகளுக்குத் தான் சோஷலிசம் உரியது என்கிறார்கள். குபேரபுரி என்று கூறப்படும் அமெ ரிக்க நாட்டிலும் 23 ஆண்டு களாக எத்தனையோ பல்க லைக் கழகங்கள் மூடப்பட் டுள்ளன கல்வியில் சீர்திருத் தங்கள் வேண்டுமெனக் கோரி பல்லாயிரக்கணக் கான மாணவர்கள் போரா டுகின்றனர். பிரான்ஸ் நாட் டில் லட்சக்கணக்கான மாணவர், கல்விமுறையின் சீர்கேட்டை எதிர்த்து வரு கின்றனர், ஆதலால் இது வளர்ச்சிக்குரிய நாடுகளுக்கு மட்டுமல்ல. ஜப்பான் போன்ற நாடுகளிலும் இப் பிரச்னையை காண்கிறோம். கல்வி, கலாச்சார மாற் றத்தைக்காண சோஷலிச கல்விமுறைவேண்டும் கல்வி முறையிலும் சமுதாய துறை யிலும் பல்வேறு முரண் பாடுஉண்டு.

### கூடிய வாய்ப்பு

கல்வியில் விஞ்ஞானத்தை படித்தோருக்கு கூடிய வாய் ப்பும், கலைத்துறை படித் தாருக்கு குறைந்த வாய்ப் பையும் காண்கிறோம், சில தொழில் முறையில் சில ருக்கு கூடிய சம்பளம் கிடைப்பதையும், திறமை உள்ளவர்கள் கூலிவேலை பார்ப்பதையும் காண்கி றோம். இது நாட்டிலுள்ள கல்விமுறையின் பிரதிபலிப் பாகும் மக்களிடம் காணப் படும் வேறுபாடு கல்வி முறையில் காணப்படுகிறது. இந்த வேறுபாடு நீக்கப்பட வேண்டும்.

அரசியல் மாற் றம் வேண்டும் தான். தனிய அரசியல் மாற்றம் போதாது சிந்தனை கல்வி முறையிலும் மாற்றம் ஏற்படவேண்டும்.

......

## மகாநாடு

பண்டத்தரிப்பு. ஞாயிறு

இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் கத்தோலிக்க மக்க ளுக்கான மறைக் கல்வி மகாநாடு இம்மாதம் 15, 16ந் திகதிகளில் நடைபெற விருக்கிறது. யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி யில் நடைபெறும் இம்மகா நாட்டில் இளைஞர் பிரச்னை கள், பிள்ளைகளுக்கு மறைக் கல்வி அளித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி யும் உரையாடல் நடை பெறவிருக்கிறது.

## சடலங்களைத் தேடுகிறார்கள்

கோட்டை, ஞாயிறு

மத்துரட்ட, ருகலை ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள் ளப்பெருக்கினால் பாதிக்கப் பட்ட மக்களின் துயர் துடைப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகள் எடு த்து வரும் அதேசமயம், ருகலபகுதியில் வெள்ளத் தில் அடித்துச் செல்லப்பட் டவர்களின் சடலங்களைத் தேடுவதில் அதிகாரிகள் தீவிர மாக ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களின் உறவினர்களும், பெற்றோ ரும் குழந்தைகளும் கண் ணீர் வடித்தபடி சடலங்க ளைத் தேடுகிறார்கள். ருக லையில் ஹைபோரஸ்ட் என்ற இடத்தில் மீன்வளர்ப்பதற் காக நிர்மாணிக்கப்பட்ட சுமார் நான்கு ஏக்கர் விஸ் தீரணமுள்ள நீர்த்தேக்கம் உடைப்பெடுத்ததால் சுமார் 35 பேருக்குமேல் வெள்ளத் தால் அடித்துச் செல்லப் பட்டுவிட்டார்கள். இவர்க ளில் பலர் நிலச்சரிவுகளில் சிக்கியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

காட்டுப் புதர்களிலும், மரக்கொப்புகளிலும், கற் பாறைகளுக்கடியிலும் வெள் ளத்தால் அடித்துச் செல் லப்பட்டவர்களின் சடலங் களை பொலிசாரும் சமூகத் தொண்டர்களும் தேடிவரு கிறார்கள்.

......

## உண்மையான ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிபால சேனநாயக்காவிட மிருந்து கிடைத்த செய்தி படிக்கப்பட்டது. சேர். அருணசலம் மகாதேவா வின் உருவப்படத்தை செனட் சபைத் தலைவர் திரு ஏ ரத்னாயக்கா திரை நீக்கம் செய்துவைத்தார். அவர் பேசுகையில் புதிய அரசியல் சட்டத்தில் சிறு பான்மையோருக்கு நியாய பூர்வமான இடம்கொடுக் கப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்

டாக்டர் எம் சி எம் கலீல் பேசுகையில், சேர் மகா தேவா இந்நாட்டின் சுதந் திரத்திற்காகப் போராடிய

## தமிழ்மொழி சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமாம்

### பஸநாயக்க சொல்கிறார்

கோட்டை, ஞாயிறு

முன்னைய அரசாங்கம் கொண்டுவந்த தமிழ்மொழி உபயோகத்துக்கான விசேஷ விதிகள் சட்டத்தை எதிர் த்து ஊர்வலம் சென்ற தம் பராவே ரத்தினசாரதேரோ துப்பாக்கி குண்டுக்கு இரை யாக நேர்ந்தது. இப்போது பதவிக்கு வந்துள்ள புதிய அரசாங்கமாவது தமிழ் மொழி உபயோக விசேஷ விதிகள் சட்டத்தை ரத்துச் செய்வதாயின் அந்தப் பெரு மகனுக்கு செய்யும் பெரிய கௌரவமாக இருக்கும்"

இவ்வாறு முன்னாள் பிர தம நீதியரசர் ஹேமா பஸ நாயக்கா கியு. ஸி. கூறினார். கொழும்பு எலிபாங் கட்டி டத்தில் இடம்பெற்ற பிக்கு கள் சங்கக் கூட்டமொன் றில் திரு, பஸநாயக்கா பேசினார்.

சுதந்திரம் கிடைத்து 22 ஆண்டுகள் ஆகியும் இன்ன மும் இந்த நாட்டுக்குத் தேவையான உணவுவகை களை உற்பத்திசெய்து கொள்ளமுடியவில்லை உரு ளைக்கிழங்கு வெங்காயம், மிளகாய், மஞ்சள், சீரகம், பெருஞ்சீரகம் போன்ற வற்றை இந்த நாட்டிலேயே உற்பத்திசெய்ய இயலும். ஆனால் ஏற்பட்டிருக்கும் தவறு என்னவென்றால் இந்த அரசுக்கு பயிர்ச் செய்கை யைப்பற்றி ஒன்றும் தெரி யாமலிருப்பதுதான் என்றார் திரு பஸநாயக்கா.

......

## வயது எல்லை 28 ஆக உயர்வு

கோட்டை, ஞாயிறு

அரசாங்க எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பிப்பவர் களின் வயது 28ஆகக்கூட்டு வதுஎன அரசாங்கம் தீர்மா னித்துள்ளது. அரசாங்க சேவையிலிருந்து விண்ணப் பிப்போரின் ஆகக்கூடியவய தெல்லை 45 என்றும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

1970 நவம்பர் 20ல்வெளி யான அரசாங்க வர்த்தமா னியில் அரசாங்க எழுது வினைஞர் பதவிக்கு விண்ணப் பிப்போரின் வயது 23 என தெரிவிக்கப்பட்டிரு ந்தது இப்பொழுது அது திருத்தப்பட்டு28வயது வரை உள்ளவர்கள் விண் ணப்பிக்கலாம்என அறிவிக் கப்பட்டுள்ளது

முடிவு திகதி டிசம்பர் 25-ம் திகதியிலிருந்து ஜன வரி 6-ம் திகதியாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## பாராட்டுத் தீர்மானம்

சுழிபுரம், சனி

யாழ் மாவட்ட உள்ளூ ராட்சி உதவி ஆணையாள ராக கடமையாற்றி யாழ்ப் பாண மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெறும் திரு: ஏ. ஏ. யோசப் பின் சேவையைப் பாராட்டி தீர்மானமொன்று ஏகமன தாக நிறைவேற்றப்பட்டுள் ளது.

சுழிபுரம் கிராம சபை மாதாந்தக் கூட்டத்திலேயே மேற்கண்டதீர்மானம் நிறை வேற்றப்பட்டதுடன் தேநீர் விருந்து அளித்து கௌர விப்பதாகவும் முடிவு செய் யப்பட்டது.

மிகச் சிறந்த குடும்பம் ஒன் றைச் சேர்ந்தவர் என்றார், திரு கே ஆழ்வாப்பிள்ளை கூட்டத்திற்கு தலைமைவகித் தார்

......

## சிறுவர் விழா

பண்டத்தரிப்பு. ஞாயிறு

இளவாலை கிழக்குப் பகுதி சிறுவர்க்கான விழா நடை பெறவிருக்கிறது. இதில் சமய அறிவுப்போட்டி, கட் டுரைப் போட்டி, பொது அறிவுப் போட்டி, பாட்டுப் போட்டி என்பனவும், சிறுவர்க்கான நாடகம், கதம்ப நிகழ்ச்சி கள் என்பனவும் நடைபெற விருக்கின்றன.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 68-ம் இலக்கத்தி லுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org